
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

செப்டம்பர் - 2004
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



அபு கிரைப் :
அம்மணமாகிற
அமெரிக்கா !



## குடந்தைப் படுகொலை:

# உண்மைதானா உங்கள் கண்ணீர்?

படிப்பகம்

www.forums.terra.com; www.albasrah.net; www.guardian.co.uk; www.thememoryhole.org

## அபு கிரைப் :
## அம்மணமாகிறது
## அமெரிக்கா !

# இந்த அநீதிகளைக் கண்ட பிறகும்
# நீங்கள்
# அமெரிக்கப் பொருட்களால்
# கற்பழிக்கப்படுவதை
# விரும்புகிறீர்களா?



"நம்முடைய எதிரிகள்
நூதனமாகச்
சிந்திப்பவர்கள்.
நாமும்தான்.
நமது நாட்டுக்கும்
மக்களுக்கும் கேடு
விளைவிக்க அவர்கள்
புதிய புதிய முறைகளில்
இடையறாது
சிந்திக்கிறார்கள்.
நாமும்தான்."



*We bring good things to life*

**இனிமையனைத்தையும்**
**கொண்டு வருகிறோம்...**
**உங்கள் வாழ்வில்!**





மலத்தில் குளிப்பாட்டி...

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● புதிய கலாச்சாரம்

● மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

● போர்: 22
● குரல்: 3-4
● ஆக.-செப். 2004

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-ஆவது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# சீருடைக் குற்றவாளிகள்

ஒரு பெண் விலைமாதாகவே இருக்கட்டும்! அல்லது தீவிரவாதியாகவே இருக்கட்டும்! அவள் மீது பாலியல் வன்முறைத் தாக்குதல் தொடுக்கவும், படுகொலை செய்யவும் போலீசுக்கோ, துணை இராணுவம், இராணுவத்துக்கோ எந்த நியதி, எந்த அதிகாரம் இடம் கொடுக்கிறது? ஆணாதிக்கச் சமூக அமைப்புதான் அதற்கான அனுமதியைக் கொடுக்கிறது! பாசிசக் கொடுங்கோலாட்சி தான் அதற்கான அதிகாரத்தைக் கொடுக்கிறது! நமது கவனத்தை ஈர்த்துள்ள சில சமீபகாலச் சம்பவங்கள் இந்த உண்மையைத்தான் இடித்துரைக்கின்றன!

சிவகாசி அருகிலுள்ள காக்கிவாடன்பட்டி கிராமத்திலுள்ள ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியரின் மகள் ஜெயலட்சுமியும் 30-க்கும் மேற்பட்ட போலீசு அதிகாரிகளும் ஒருவருக்கு எதிராக ஒருவர் கூறும் பல்வேறு புகார்கள், போலீசுத்துறையில் புரையோடிப் போயிருக்கும் சீரழிவுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன. எந்தவொரு சிறு விஷயமானாலும் கூச்சல்போடும் எதிர்க்கட்சிகள் உட்பட ஏறக்குறைய எல்லா ஓட்டுக் கட்சிகளும் இந்த விவகாரத்தில் போலீசுக்கு எதிராக வாய் திறக்க மறுக்கின்றன. ஜெயலட்சுமி - போலீசு தகராறை வைத்து பாலியல் செய்தி வியாபாரம் செய்யும் கிசுகிசுப் பத்திரிக்கைகள் 'பஜாரி'யான ஒரு பெண்ணிடம் போலீசு அப்படி நடந்து கொண்டது ஒன்றும் குற்றமில்லை என்றவாறு நியாயப்படுத்த முயலுகின்றன. சாதாரணக் காலங்களில் போலீசின் கடமை தவறாமை குறித்துப் பாராட்டும் ''தேசிய மைய நீரோட்டப் பத்திரிக்கைகள்'' இந்த விவகாரத்தில் பட்டும் படாமலும் செய்தி வெளியிட்டுப் பம்மாத்து செய்கின்றன. ஆனால் ஜெயலட்சுமிகளை உருவாக்குவதே போலீசு தான்.

மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலாவில் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்த இராணுவம் தங்ஜம் மனோரமா என்ற பெண்ணைத் தனது முகாமுக்கு இழுத்துக் கொண்டுபோய் வன்புணர்ச்சி செய்து சுட்டுக் கொன்று வீதியோரம் வீசியது. ''அவள் ஒரு கொடிய தீவிரவாதி, பிடித்து வரும்போது, ஓடும் வண்டியிலிருந்து குதித்துத் தப்பி ஓடினாள்; சுட்டுக் கொன்றோம்'' என்கிறது இராணுவம். இதுதான் உண்மை என்றால் அவளது உடலை உரிய இடத்திற்கு எடுத்துச் செல்லாமல் இராணுவத்தினர் வீதியிலேயே போட்டுவிட்டு ஏன் ஓடவேண்டும்? அவளது உடலில் பாய்ந்திருந்த 13 தோட்டாக்களில் மூன்று அவளது பெண்ணுறுப்பைத் துளைத்துக் கொண்டு சென்றிருப்பது எப்படி?

குமுறிக் கொதித்தெழுந்த மணிப்பூர் மக்கள் — பள்ளிச் சிறுமிகள் முதல் வயதான மூதாட்டிகள் வரை, உண்ணாவிரதம் முதல் தொடர்ந்து பல நாட்கள் கடையடைப்பு, பொது வேலைநிறுத்தம் நடத்துகின்றனர். தங்கள் பாடப்புத்தகங்களை ஆளுநரிடம் கையளிக்கச் சென்ற பள்ளி கல்லூரி மாணவர்கள் கைது செய்து சிறையிலடைக்கப்படுகின்றனர். ஒருநாள், இராணுவத் தலைமையகத்தின் முன்பு திரண்ட சில பெண்கள் திடீரென்று ஆடைகளைக் களைந்து விட்டு ''இந்திய இராணுவமே எங்களைக் கற்பழியுங்கள்'' ''இந்திய இராணுவ நாய்களே மணிப்பூரை விட்டு வெளியேறுங்கள்!'' என்று பதாகையை பிடித்துக் கொண்டு முழங்கினர். இக்கிரிமினல் குற்றம் புரிந்த இராணுவத்தினர் விசாரணை அதிகாரிகள் முன்பு வர மறுத்துத் திமிர்த்தனம் செய்கின்றனர்.

சட்டத்தைப் பாதுகாப்பதற்கென்று அமைக்கப்பட்ட போலீசு, கிரிமினல் குற்றங்கள் புரிவதில் சாதனை படைக்கின்றது. நாட்டை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதாகக் கூறப்படும் இராணுவம் உள்நாட்டு மக்களின் வாழ்வையும் உயிரையும் சூறையாடுகிறது. சட்டம் - நீதியை நிலைநாட்டுவதே தமது கடமையெனக் கூறிக் கொள்ளும் நீதிமன்றங்களில் இலஞ்ச - ஊழல் தலைவிரித்தாடுகிறது. இதை எதிர்த்துப் போராடும் வழக்குரைஞர்கள் மீது பாசிச அடக்குமுறை ஏவிவிடப்படுகிறது. அதேசமயம் குற்றம் புரிவதையே வழக்கமாகக் கொண்ட போலீசுக்கும் இராணுவத்துக்கும் - துணை இராணுவத்துக்கும் நீதித்துறைக்கும் வரைமுறையற்ற அதிகாரமும் சட்டபூர்வப் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

போலீசோ, இராணுவமோ, நீதிபதிகளோ பிறவியிலோ, கல்வி-பயிற்சியிலோ நற்பண்புகள் பெற்ற ஒழுக்க சீலர்களல்ல. அரசியல்வாதிகளைப் போலவே இலஞ்ச ஊழல், அதிகார முறை கேடுகளுக்கான வாய்ப்புகளைக் குறிவைத்தே இந்தப் பணிகளைத் தேடிப் பிடித்தவர்கள். பிறகு, இவர்களுக்கு மட்டும் எதை நம்பி, எந்த அடிப்படையில் இவ்வளவு வரைமுறையற்ற அதிகாரங்களும் பாதுகாப்புக்களும்? அமைப்பாக திரட்டப்பட்டுள்ள மிக மோசமான இந்தச் சீருடைக் குற்றவாளிகளை என்னதான் செய்வது?

சமீபத்தில் நாகபுரியில் பல பெண்களைப் பாலியல் வன்முறை செய்து திரிந்த ரௌடி ஒருவனை, வழக்கு மன்றத்திலேயே வைத்து சில பெண்கள் ஆத்திரம் தீர வெட்டிக் கொன்றார்கள். ''இது ஒரு தவறான முன்னுதாரணமாகிவிடும்'' என்று அலறியிருக்கிறார் நாகபுரி போலீசு ஆணையர். இல்லை. சாதாரண ரௌடிகளுக்கு எதிராக மட்டுமல்ல, சீருடைக் குற்றவாளிகளுக்கும் எதிரான, சரியான, அவசியமான நடவடிக்கை இதுதான் என்று முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்! ●

படிப்பகம்

www.padippakam.com



# குடந்தைப் படுகொலை: உண்மைதானா உங்கள் கண்ணீர்?

கோத்ரா ரயில் பெட்டி எரிப்பு விபத்தா - சதியா, சதியென்றால் யார்செய்த சதி என்ற கேள்விகளுக்குள்ளெல்லாம் போக இடம் தராமலேயே ஆர்.எஸ்.எஸ். கும்பல் முடிவை அறிவித்தது. முஸ்லிம்கள்தான் குற்றவாளிகள் என்ற இந்துமத வெறியர்களின் தீர்ப்பை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒப்புக் கொள்ளுமாறு நாடே மிரட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து குஜராத் இனப்படுகொலை. தேர்தலில் மோடியின் வெற்றி.

குடந்தையில் கருகிச் செத்த குழந்தைகள் விசயத்திலோ இத்தகைய கேள்விகள் எதுவுமே இல்லை. விபத்து என்பதை எல்லாக் கட்சிகளும் ஊடகங்களும் ஒருமனதாக உடனே ஏற்றுக் கொண்டன. தனியார் கல்வி முதலாளிகளின் லாபவெறிக்கும் இந்த 'விபத்துக்கும்' இடையிலான உறவு பற்றி மெலிதான குரலில் கூட எந்தக் கட்சியும் பேசவில்லை.

கேரளத்தில் கல்வி தனியார்மயத்தின் விளைவாகத் தற்கொலை செய்து கொண்ட மாணவி ரஜினியின் சாவு கேரளத்தை உலுக்கியபோது கல்விக் கடன் தரமறுத்த வங்கிகள் தாக்கப்பட்டன. 'தற்கொலைக்குக் காரணம் காதல் தோல்வி' என்றெல்லாம் திசைதிருப்புவதற்கு நடைபெற்ற முயற்சிகளால் போராட்டத்தை நிறுத்த முடியவில்லை.

எனினும் கேரளத்தின் தீ கூடத் தமிழகத்தில் பற்றவில்லை. அந்த அளவிற்குத் தமிழகம் கண்ணீரில் குளித்து நமத்துக்கிடந்தது. தஞ்சை மாவட்ட ஆட்சியரின் கூற்றுப்படி, ''ஒரு சிறிய சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை கூட குடந்தையில் ஏற்படவில்லை; எந்தவொரு சொத்தும் தாக்கப்படவில்லை.'' அந்த அளவிற்குச் சோகம்!

தாளாளர் பழனிச்சாமிக்கு எதிராகவோ இந்தப் பள்ளிக்கு அனுமதியளித்த அதிகாரிகளுக்கு எதிராகவோ கூட தமிழகத்தின் சுவர்களை நிரப்பிய எந்தச் சுவரொட்டியும் குரல் கொடுக்கவில்லை. அக்னிதேவனும், கடவுளும் விதியும்தான் சுவரொட்டிகளின் தாக்குதல் இலக்குகள். திருமணத்துக்கும், பிறந்தநாளுக்கும், பூப்பு நீராட்டு விழாவுக்கும் போஸ்டர் அடிக்கும் தமிழகம், கோடிக்கணக்கான ரூபாய்க்கு போஸ்டர் அடித்து ஒட்டித் தனது கடமையை முடித்துக் கொண்டது. அதிகபட்சம் ஒரு சில இரங்கல் ஊர்வலங்கள்.

கருகிய உடல்களையே மீண்டும் மீண்டும் காண்பித்து சீரியல் சோகத்துக்கு இணையான சோகத்தை உருவாக்கின தொலைக்காட்சிகள். இத்தனை வலிமையான சோக சீரியலுக்குத் தேவைப்படும் வில்லன் பாத்திரம் கிடைக்காததால் ஜெயலலிதா வருகையையொட்டி நடந்த போலீசு கெடுபிடிகளையே வில்லன் பாத்திரத்தில் திணித்தது சன் தொலைக்காட்சி. பத்திரிக்கை நிருபர்களோ 'கண்ணீர் அஞ்சலி' விளம்பரத்துக்கு வியாபாரிகளிடம் கூச்சமின்றி 'கான்வாஸ்' செய்தனர்.

மக்கள் கலை இலக்கியக் கழகமும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியும் தமிழகம் முழுவதும் நடத்திய ஆர்ப்பாட்டங்களையும் இந்திய மாணவர் சங்கத்தினர் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தையும் தவிர வேறு எதுவும் 'குடந்தைப் படுகொலைக்குக் கல்வி தனியார்மயமே மூலகாரணம்' என்பதைப் பேசவில்லை.

குடந்தையில் மகாமகத்தை அம்பலப்படுத்திப் பொதுக்கூட்டம் நடத்த முனைந்தபோது ''பக்தர்கள் மனம் புண்படும்'' என்று கூறி அனுமதி மறுத்தது போலீசு. இப்போது கிருஷ்ணா பள்ளிக்கு அஞ்சலி செலுத்தச் செல்லும் பக்தர்களின் மனம் புண்படுமென்று கூறி கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு ஆளரவமற்ற பகுதியைக் காட்டியது.

பிள்ளையைப் பறிகொடுத்த பெற்றோர் பலரைச் சந்தித்துப் பேசினோம். அவர்களுடைய கோபம் ஆசிரியைகள் மீதுதான் மையம் கொண்டிருந்தது; சிலர் பழனிச்சாமியைத் தண்டிக்க வேண்டும் என்று பேசினர். மற்றப்படி, அரசும், பிரமுகர்களும் சொரிந்த காருண்யமும், தமிழகம் சொரிந்த கண்ணீர் மழையும் அவர்களை நன்றியுணர்ச்சியில் ஊற வைத்திருந்தது. அவர்களது கோபத்தின் இலக்காகவும், கையறு நிலையின் விளக்கமாகவும் எஞ்சியிருந்தது 'தலைவிதி' மட்டுமே!

சென்னையில் நாம் சந்தித்த நடுத்தர வர்க்கப் பெற்றோர் பலர் குடந்தை

> நியாயமான கருத்தாலும், நேர்மையான உணர்ச்சியாலும் உந்தப்படாத கண்ணீர், சிறுநீருக்குச் சமமானது. அத்தகைய கண்ணீரை மதிப்பதும் அதைக் கண்டு மயங்குவதும் அறிவீனம்.


படிப்பகம்

www.padippakam.com

'விபத்துக்கு', அக்குழந்தைகளின் பெற்றோரையே பிரதானமாகக் குற்றம் சாட்டினர். தினக்கூலிகளின் வாழ்க்கைச் சூழல் குறித்த அறியாமையும், 'திருந்த மறுக்கும்' உழைக்கும் வர்க்கத்தின் மீது நடுத்தரவர்க்கம் அவ்வப்போது வெளிப்படுத்தும் அலுப்பும் அவர்கள் இவ்வாறு சிந்திக்கக் காரணம் என்று சொல்லலாம்.

எனினும் முதன்மையான காரணம் வேறிருக்கிறது. 'கல்வியளிப்பது அரசின் கடமையல்ல' என்ற தனியார்மயப் பிரச்சார முழக்கத்தை நடுத்தரவர்க்கம் ஏற்றுக் கொண்டு விட்டது. ''பிள்ளைக்குக் கல்வியளிப்பது பெற்றோர் கடன்'' என்ற மூதுரையைப் புளிபோட்டு விளக்கி மூளையில் பொருத்திக் கொண்டு, பெற்ற கடனைக் கட்ட நர்சரிப் பள்ளி வாயிலில் வரிசையில் நிற்கிறது.

எனவேதான் ''பெத்துட்டா மட்டும் போதுமா சார்?'' என்று குடந்தைப் பெற்றோர்களைக் குற்றம் சாட்டுகிறார்கள் நடுத்தர வர்க்கத்தினர். அவர்களைப் பொறுத்தவரை ''கல்வி - தனியார்மயம்'' என்பது திட்டமிட்டே அமலாக்கப்படும் அரசாங்கக் கொள்கை அல்ல; அரசுப் பள்ளி ஆசிரியர்கள் ஒழுங்காகப் பாடம் நடத்தாததால் வந்த விளைவு.'' அவ்வளவுதான்.

கல்விக்கான நிதி ஒதுக்கீட்டைஅரசாங்கம் படிப்படியாகக் குறைத்து வருவதோ, ஒதுக்கப்படும் நிதி ஆசிரியர்களின் சம்பளத்திற்கே காணவில்லை என்பதோ, கடந்த 25 ஆண்டுகளில் தமிழகத்தில் ஒரு மாநகராட்சிப் பள்ளி கூட புதிதாகத் தொடங்கப்படவில்லை என்பதோ அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் தினக்கூலிகளாக நியமிக்கப்படுவதோ இந்தப் 'படித்த' வர்க்கத்துக்குத் தெரியாது. கிராமப்புறங்களில் இழுத்து மூடப்பட்ட தொடக்கப் பள்ளிகள், இழுத்துக் கொண்டு கிடக்கும் ஓராசிரியர் பள்ளிகள் போன்றவை குறித்த செய்திகள் படித்த வர்க்கத்தின் பார்வைக்கே வராதவை.




அடிமைத்தனமும் பிழைப்புவாதமும் வடித்த கண்ணீர்!

எனவேதான் ''கும்பகோணம் சம்பவத்தில் நம்முடைய தார்மீகப் பொறுப்பு என்னவென்று கருதுகிறீர்கள்?'' என்று கேட்டவுடனே படித்த வர்க்கம் அதிர்ச்சியடைந்தது. ''கும்பகோணம் எங்கே இருக்கு; நாங்க எங்கே இருக்கோம். என்ன சார் கேள்வி இது?'' என்று எரிச்சலடைந்தார்கள்.

இதே கேள்வியை கிருஷ்ணா பள்ளி அமைந்திருந்த காசிராமன் தெருவில் யாரிடமாவது கேட்டிருந்தாலும் இதே விதமான பதில் தான் வந்திருக்கும். தனக்குப் பொறுப்பில்லை என்பது மட்டுமல்ல, அரசுக்கும் பொறுப்பில்லை என்று கூறும் படித்த வர்க்கத்தின் இந்த அறிவு, அஸ்பெஸ்டாஸ் கூரையைத் தீர்வாக ஒப்புக் கொள்வதில் வியப்பேதுமில்லை. ''தீப்பிடிக்காமலிருக்க திறந்தவெளியே சிறந்தது'' என்று அரசு கூறினாலும் 'ஆமாம்' என்று சொல்வதற்கு ஆளிருக்கும்.

குடந்தைச் சம்பவத்திற்கு, பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் மீதே குற்றம் சுமத்தும் இந்தப் பொதுக்கருத்து, வெறும் கருத்தல்ல. இது சட்ட முன்வரைவாகத் தயார் நிலையில் இருக்கிறது.,

●●●

''இலவச, கட்டாயக் கல்வி மசோதா - 2004'' (Free and compulsory education bill, 2004) என்பது தான் மத்திய அரசு கொண்டுவரவிருக்கும் இந்தச் சட்டத்தின் பெயர். (விரிவாக அம்பலப்படுத்தி முறியடிக்கப்பட வேண்டிய இந்த மசோதாவின் சில மையமான விசயங்களை மட்டும் இங்கே காண்போம். இம்மசோதாவைப் படிக்க விரும்புவோர் www.education.nic.in - என்ற வலைத்தளத்தில் காணலாம்)

இலவசம் - கட்டாயம் என்ற முரண்பட்ட இரு சொற்களை ஒருங்கே கொண்டிருக்கும் இச்சட்டம் கூறுவது இதுதான். மைய அரசு எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வியை இலவசமாக வழங்க இருக்கிறது; பெற்றோர் அதைக் கட்டாயமாகத் தம் பிள்ளைகளுக்குப் பெற்றுத்தர வேண்டும்.

அரசாங்கம் இலவசமாகத் தரவிருக்கும் கல்வியின் யாக்கியதை என்ன? இப்படி ஒரு கேள்வியை எழுப்பும் உரிமை பெற்றோருக்குக் கிடையாது


படிப்பகம்

www.padippakam.com



தீப்பிடிக்காத கல்விக் கூடம்: நடைபாதைச் சிறுவர்களுக்கு கல்விச் சேவை
நாளை அரசு இதற்குச் சூட்டவிருக்கும் பெயர் இடைக்கட்டப் பள்ளி!

என்கிறது அரசு. இருந்தாலும் போனால் போகிற தென்று கீழ்க்கண்ட விவரங்களை இந்த மசோதா தெரிவிக்கிறது.

அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் (approved schools), இடைக்கட்டப் பள்ளிகள் (Transitional schools) என்று தொடக்கப் பள்ளிகளை இரண்டு வகையாகப் பிரிக்கிறது இந்த மசோதா.

அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளிலேயே குடிதண்ணீர், கழிவறை, மைதானம், பள்ளிக்கு சுற்றுச் சுவர் போன்றவை இருக்க வேண்டிய அவசியமில்லையாம். 'இருந்தால் நல்லது' என்கிறது மசோதா.

இடைக்கட்டப் பள்ளிகளுக்கோ முறையானகட்டிடமும் 'அவசியமில்லை - இருந்தால் நல்லது' என்கிறது சட்டம். ஆசிரியர் 10-வது படித்திருக்க வேண்டுமாம்; சுற்றுவட்டாரத்தில் அவ்வளவு 'பெரிய' படிப்பு படித்த ஆசிரியர் இல்லாவிட்டால், இருப்பவர்களை வைத்துச் சமாளிக்கலாமாம். இத்தகைய பள்ளிகளுக்கான செலவுக்கு அந்த வட்டாரத்து மக்களும் பணம் கொடுக்க வேண்டுமாம்.

இப்பேர்ப்பட்ட 'தரமான-இலவச' கல்வி கற்பதற்குத் தம் பிள்ளைகளை பெற்றோர் அனுப்பி வைக்கவில்லையென்றால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். தண்டனை 1000 ரூபாய் அபராதம். அதன்பிறகும் பிள்ளை பள்ளிக்கு வராவிட்டால் நாளொன்றுக்கு 50 ரூபாய் அபராதம்!

தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும், தறிகளிலும், வீடுகளிலும், பட்டறைகளிலும், ஓட்டல்களிலும், கடைகளிலும் வேலை செய்யும் குழந்தை உழைப்பாளர்களை என்ன செய்வது? ''அவர்கள் வேலை செய்யட்டும்; அதே நேரத்தில் பள்ளிக் கூடத்துக்கும் அனுப்ப வேண்டும்!'' என்று முதலாளிகளை எச்சரிக்கிறது இந்த மசோதா.

நகைக்கத் தக்கதாகத் தோன்றலாம். ஆனால் ''கும்பகோணம் குழந்தைகளின் சாவுக்குப் பெற்றோர்தான் பொறுப்பு'' என்று கூறும் படித்த வர்க்கத்தின் கருத்தை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். சிரிக்கத் தோன்றாது.

''கல்வியறிவின்மைக்குக் காரணம் அரசு அல்ல, ஏழைப் பெற்றோர்தான்'' என்கிற பொய்யின் மீதுதான் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஊரில் பள்ளி இல்லை, பணம் கட்டிப் படிக்க வைக்க வசதியில்லை பிள்ளையும் சேர்ந்து உழைக்காவிட்டால் கஞ்சியில்லை - என்ற காரணங்களினால்தான் ஏழைப் பிள்ளைகள் படிப்பதில்லை. ஆனால் ஏழ்மையை, தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக்குகிறது இந்த மசோதா.

இது அநீதியாகத் தோன்றலாம். ஆனால் கும்பகோணம் கொடுமைக்காகக் கண்ணீர் சிந்திய படித்த வர்க்கத்தின் மனச்சாட்சியைக் கொஞ்சம் சுரண்டிப் பாருங்கள். ஏழைப் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கெடுக்கும் குற்றவாளிகள் அவர்களுடைய பெற்றோர்தான் என்பதை நயம்பட விளக்குவார்கள்.

**குடந்தைச் சம்பவத்திற்கு, பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் மீதே குற்றம் சுமத்தும் இந்தப் பொதுக்கருத்து, வெறும் கருத்தல்ல. இது சட்ட முன்வரைவாகத் தயார் நிலையில் இருக்கிறது.**

நியாயமான கருத்தாலும், நேர்மையான உணர்ச்சியாலும் உந்தப்படாத கண்ணீர், சிறுநீருக்குச் சமமானது. அத்தகைய கண்ணீரை மதிப்பதும் அதைக் கண்டு மயங்குவதும் அறிவீனம். கும்பகோணம் குழந்தைகளுக்காகத் தமிழகம் வடித்துள்ள கண்ணீரின் யோக்கியதை இதுதான்.

''ஒழுங்கான கட்டிடம் தேவையில்லை, குடிநீரோ, கழிவறையோ, முறையான ஆசிரியரோ கூடத் தேவையில்லை. இதுதான் பள்ளி. இதற்கு உன் பிள்ளையை அனுப்பாவிட்டால் தண்டனை!'' என்று பெற்றோரை எச்சரிக்கிறது வரவிருக்கும் சட்டம்.

''மாடியில் பள்ளி, கூரைக்குக் கீற்று, நுழைவாயில் ஒன்று, குடிநீரில்லை, கழிவறையில்லை. ஆனால் வேன் வாடகை முப்பதே ரூபாய்!'' எனறு ஏழைப் பெற்றோர்களைத் தனது விளம்பரத்தால் கவர்ந்திழுத்தார் பழனிச்சாமி.

பழனிச்சாமியின் மீது என்ன குற்றம் வேண்டுமானாலும் சுமத்தலாம். ஆனால் ''என் பள்ளிக்கு பிள்ளைகளை அனுப்பாவிட்டால் உங்களைத் தண்டிப்பேன்'' என்று பெற்றோரை மிரட்டியதாகப் பழனிச்சாமி மீது குற்றம் சாட்ட முடியாது.

எனினும், பாவம் பழனிச்சாமி உள்ளே இருக்கிறார். இந்த மசோதா வெளியே இருக்கிறது. நாடாளுமன்றத்திற்குள்ளே நுழைவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

இந்த மசோதா சட்டமான பின்னால் பழனிச்சாமிகள் வெளியே வந்து விடலாம்; 'குற்றவாளி' பெற்றோர் உள்ளே போக வேண்டியிருக்கும்.

**செய்தித் தொகுப்பு:**
**முகிலன், பாண்டியன், செம்புலம்**


படிப்பகம்

www.padippakam.com

# குடந்தைப் படுகொலை: கண்ணீரில் மறைந்திருக்கும் வெறுப்பு

கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவில்லை; பிஸ்மில்லா கானின் ஷெனாய் அழவில்லை; எனினும் சென்னையின் 'ரேடியோ மிர்ச்சி' சுசித்ரா முதல் 'காமெடி டைம்' அர்ச்சனா வரை அனைவரும் கும்பகோணம் பற்றிச் சொல்லி அழுதனர். கடையடைப்பும் விடுமுறையும் இல்லாத இந்த தேசிய சோகத்தின் ஆழமென்ன என்று அறிவதற்காகச் சென்னை மாநகரின் மேட்டுக்குடிப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் போன்ற பலரிடம் பேசினோம்.

"பாருங்க. இப்பக் கூட அத நெனச்சா அழுகையா வருது" எனப் பேச்சைத் தொடங்கினார் லதா ரஜினி காந்த் நடத்தும் ஆஷ்ரம் பள்ளியின் ஆசிரியை. "புளி அடைப்பது போல வகுப்பில் பிள்ளைகளை அடைத்தது தான் காரணம்" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, நாலே நாலு மாண்வர்களை ஏற்றிக் கொண்டு ஆஷ்ரம் பள்ளியின் வேன் எங்களைக் கடந்து சென்றது.



குடந்தையைச் சாக்கிட்டு மேட்டுக்குடிப் பள்ளியான சென்னை டி.ஏ.வி. பள்ளியில், தீ விபத்திற்குத் தற்காப்புப் பயிற்சி - வக்கிரக்கூத்து!

அனைவருக்கும் ஒரேவிதமான இலவசக் கல்வியை அரசே வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையைப் பற்றிக் கேட்டவுடன் சட்டென்று அவரிடமிருந்து பதில் வந்தது; "இதுக்கெல்லாம் பணக்காரப் பசங்க ஒத்துக்கு வாங்களா?"

"பள்ளி நிர்வாகம்தான் பொறுப்பு" என்று அடித்துப் பேசினார் டி.ஏ.வி. பள்ளியின் ஒரு ஆசிரியை. "எங்க ஸ்கூல் மாதிரி ஃபயர் டிரில் எல்லாம் நடந்திருந்தா இப்படி ஆயிருக்காது" என்றார். தீயணைப்பு வீரன் கூட உயிர் தப்ப முடியாத அந்தப் பள்ளியின் அமைப்பை விளக்கினோம். "அப்படீன்னா பெத்தவங்கதான் பொறுப்பு. ஏன் உள்ளூரை விட்டுட்டு வெளியூர்ல சேக்கறாங்க?" என்றார். "உள்ளூரில் பள்ளியே இல்லை" என்றோம். "அப்படீன்னா லஞ்சம் வாங்கிட்டு பர்மிஷன் கொடுத்த அதிகாரிகள்தான் பொறுப்பு" என்றார். அப்படியானால் அரசுதான் பொறுப்பு என்கிறீர்களா? எனக் கேட்டோம். "அதிகாரி வேற, அரசு வேற; அரசு வேற ஜெயலலிதா வேற; எல்லாத்தயும் முடிச்சுப் போடக்கூடாது" என்று நமக்குத் 'தெளிவு'படுத்திவிட்டுத் தப்பித்தார்.

ஜெயா புகழ் சர்ச் பார்க் கான்வெண்ட் மாணவிகளிடம் "குடந்தை குழந்தைகளுக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டோம். நாங்க ஸ்லம்முக்குப் (சேரிக்கு) போய் விழிப்புணர்வு உண்டாக்குறோம் என்றனர். "விழிப்புணர்வுன்னா?" "இங்கிலீஷ் சொல்லித் தருவோம்; சுத்தமா இருக்கக் கத்துக் கொடுப்போம்" என்று தங்கள் சேவைகளைப் பட்டியலிட்டனர்.

"பெத்தவங்கள சொல்லணும் சார். பசங்க மம்மி, டாடின்னு இங்கிலீஷ்ல ரெண்டு வார்த்தை பேசணும்கிறதுக்காக கண்ட ஸ்கூல்ல சேத்தா இப்படித்தான்" என்று பொரிந்து தள்ளினார் ஒரு தந்தை. இடம்: அண்ணா ஆதர்ஷ் ஆங்கிலப் பள்ளி. "உங்க பசங்கள மட்டும் ஏன் இங்கே சேத்தீங்க?" என்று கேட்டோம். "அப்பதானே அவுங்க எதிர்காலம் நல்லாயிருக்கும்" என்று கூச்சமே இல்லாமல் பதில் சொன்னார்.

"அரசுப் பள்ளியிலயா, என் பிள்ளைகளையா, நெவர்" என்றார் பத்மா சேஷாத்ரி பள்ளியின் வாயிலில் ஒரு தந்தை. "அங்க என்ன தரம் இருக்கு. வாத்தியார்லாம் பாடம் நடத்தாம உக்காந்து விகடன் படிக்கிறான்க. பசங்க உருப்பட டுமா?" என்று கொதித்தார். "ஒருவேளை உங்க பையனுக்கு அரசுத் துறையில் வேலை கிடச்சா?" என்று நாம் கேட்டவுடன் "நல்லதுதானே" என்றார். "எதுக்கு... ஆனந்த விகடன் படிக்கவா?" என்று நாம் மடக்கியதும் "அது வேற, இதுவேற சார்" என்று நழுவினார்.

"அவன் ரிசல்ட் காட்டறான். காசு வாங்குறான். அரசாங்கப் பள்ளியில் ரிசல்ட் கம்மி, காசும் கம்மி" என்று காசுக்கும் கல்விக்கும் உள்ள தொப்புள் கொடி உறவை விளக்கினார் இன்னொருவர். "நீங்க (அரசு) இலவசமா கல்வி கொடுக்கிறது உங்க விருப்பம். ஆனால் என் பிள்ளையை பணம் கொடுத்து படிக்க வைக்கிறது என் உரிமை" என்றார் பன்னாட்டு நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு பெண்.

அடுத்து நாம் சந்தித்தது ஒரு தனியார் கல்லூரியின் பெண் விரிவுரையாளரை. ஐ.ஏ.எஸ். தேர்வுக்காகத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தவர், 'குடந்தை' என்று நாம் கூறியவுடனே பேசத் தொடங்கினார். "அரசியல் சாசனத்தை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று ஆரம்பித்தார். கல்வி பெறும் உரிமை பற்றிப் பேசப் போகிறார் என்று எதிர்பார்த்தோம். "லாபம் சம்பாதிப்பது தனி நபரின் உரிமை" என்று பழனிச்சாமியின் வக்கீலாக மாறி வாதாடினார்.

விவாதம் கொஞ்சம் சூடு பிடித்தவுடன் அருகிலிருந்தவர் தலையிட்டார்: "விடுங்க சார். இந்தியாவுல 100 பேர் சாகிறதென்ன புதுசா? அந்தப் புள்ளங்களெல்லாம் கருவிலேயே செத்துப் போச்சுன்னு நெனச்சுக்குங்க. யார் பொறுப்பு யார் பொறுப்புன்னு பின்லாடன் அளவுக்கு குற்றவாளி ஆக்கப் பாக்குறீங்களே!" என்று முற்றுப் புள்ளி வைத்தார்.

'ஐயோ பாவம்' என்று பேசத் தொடங்கிய நடுத்தர, மேட்டுக்குடி வர்க்கத்தின் மனிதாபிமானத்தை மிகவும் 'நாசுக்காக'த்தான் உரசினோம். அது இங்கே வந்து முடிந்து விட்டது.

**செய்தித் தொகுப்பு:**
**மேகலை, ஜென்னி, கார்மேகம்**


படிப்பகம்

www.padippakam.com




# குடந்தைப் படுகொலை: தகவல் ஊடகங்களின் 'புலனாய்வு'

கும்பகோணம் சரஸ்வதி நர்சரி பள்ளியில், நிகழ்ந்த கொடுமைக்கு வாசகன் என்ன வகையில் எதிர்வினை ஆற்றியுள்ளான் என்பதும், தமிழ் வாசகன் ஒரு சமூக நிகழ்வை எங்ஙனம் பார்க்கப் பழக்கப்படுத்தப்படுகிறான் என்பதும் தெரியவருகிறது.

ஒரு கற்பழிப்பு - கொலை சம்பவம் தினத்தந்தியில் 2-வது பக்கத்தில், எப்படி நடந்தது, நடத்தை சந்தேகமா, பூட்டியிருந்த அறைக்குள் அவள் நுழைந்தது எப்படி, தனியாக இருந்த போது கொலை நடந்ததா - போன்ற கேள்விகளின் அடிப்படையில் விவரங்கள் தொகுக்கப்பட்டு திரைக்கதைக்குரிய சுவையுடன் வாசகர்களுக்கு வழங்கப்படுகிறது. டீக்கடை பெஞ்சு வாசகனும் ருசிகரமாக இதை 'ஆய்வு' செய்கிறான்; விவாதிக்கிறான்.

தனியார் கல்விக் கொள்ளையின் லாபவெறித் 'தீ'க்குப் பலியான கும்பகோணம் குழந்தைகளின் துயரமும் இதேபோலத்தான் சித்தரிக்கப்பட்டது. தீ வைத்தது யார்? கிரில் கேட் ஏன் மூடப்பட்டது? ஆசிரியர்கள் மாயமான மர்மம் என்ன? சமையல்காரப் பெண்மணிகளின் அசிரத்தை காரணமா? பள்ளித் தாளாளர் பழனிச்சாமி எங்கிருக்கிறார்? - என்று வாரத்திற்கு இரண்டு திடீர் திருப்பங்களை உருவாக்கி, படிப்பவரை அதிர்ச்சிக்குள்ளாக்கின பத்திரிக்கைகள். 'சிகிச்சை பெற்று வரும் குழந்தைகள் சொல்லப் போகும் வாக்குமூலங்கள் இந்த வழக்கில் திருப்புமுனையை ஏற்படுத்த இருப்பதாகப் பரபரப்பூட்டுகிறது ஜூ.வி. இந்தச் சித்தரிப்புகளின் ஊடாகத்தான் கும்பகோணம் கொடூரத்தைப் பார்க்க வேண்டிய கட்டாயம் வாசகர்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது.

'ஸ்டோரி'யின் உயிரும், உணர்ச்சியும் இதில் தான் அமைந்திருக்கிறது என்று வாசகர்களை உணர வைப்பதிலும் இதைத்தாண்டிச் சிந்திக்காமல் இதற்குள்ளேயே வாசகனை ஊற வைப்பதிலும் கவனமாக இருக்கின்றன பத்திரிக்கைகள்.

"ஏம் பாட்டி என்னையப் பார்க்க அக்கா வரல" என்ற சிகிச்சை பெற்று வரும் குழந்தையின் அரற்றல், "போகமாட்டேன்" என்று அடம்பிடித்த குழந்தையை பள்ளிக்கு அன்று வம்படியாக அனுப்பி வைத்த தந்தையின் சோகம்... என வெளியான செய்திகள் அனைத்தும் பெற்றோர்களின் தனிப்பட்ட சோகத்தையே மீண்டும் மீண்டும் சித்தரித்தன. வாசகர்களிடம் கழிவிரக்க உணர்ச்சியைத் தோற்றுவிப்பதிலும், பராமரிப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும் கூட்டாகச் செயல்பட்டுள்ளன பத்திரிக்கைகள்.

ஒரு பக்கம் குழந்தைகள் சாவு, மரண ஓலங்கள், தாய்மார்களின் கண்ணீர், பரிதவிப்புகளில் மனித மனச் செயல்பாட்டின் அனைத்து ரக சோக உணர்ச்சிகளையும் திரைக்கதைக்குரிய நேர்த்தியுடன் கிளறி விடுகிறார்கள். சினிமா நடிகர்கள், அரசியல் பிரபலங்களின் அற்ப உதவித் தொகைகள் மற்றும் ஆறுதல் நடவடிக்கைகளால் இந்த மன உணர்ச்சியின் ஆற்றாமையைத் துடைத்து விடுகிறார்கள். "கண்கலங்கிய ஜெ", "ஓடி வந்த தயா" "சோனியா ஆறுதல்" - பெரிய மனிதர்களின் ஆறுதல் நடவடிக்கையுடன் ஒன்றிப் போகிறார்கள், வாசகர்கள். பழனிச்சாமிகளை உருவாக்கிய கொலைகாரர்களே இவர்கள்தான் என்ற உண்மை இருட்டடிப்பு செய்யப்பட்டு விடுகிறது.

யாரைப் பழிப்பது எனத் 'தெரியாமல்' தீயின் பாதகச் செயலைச் சபிக்கிறார்கள் ஆ.வி., குமுதம் கவிஞர்கள். கடவுள் மீது உணர்ச்சிவயமான கோபத்தை வெளியிடுகிறார்கள். எனவே, ஒரு சராசரி வாசகன் இப்பிரச்சினையை அணுகுவதும், கதைப்பதும், அசைபோடுவதும் இந்த வட்டத்திற்குள் மட்டுமே நிகழ்கிறது.

இந்த சம்பவத்திற்காக எந்தப் பத்திரிக்கையும் தனது வழக்கமான சினிமா, அரட்டை, ஜோக்குகள், மற்றும் கிளுகிளு பக்கங்களை நீக்கவுமில்லை, குறைக்கவுமில்லை. கேளிக்கைக்குள்ளே சோகத்தை ஒளிக்கும் இந்தத் தந்திரம், மக்களின் சிந்தனையையும் செயல்பாட்டையும் குழைத்து வடிவமைக்கிறது.

கும்பகோணம் 'தீ விபத்தை' ஒட்டி அதிகபட்சமாக சில பத்திரிக்கைகள் எழுதியது இதுதான்: "அரசு அலட்சியமாக இருக்கக் கூடாது; சிட்டிபாபு கமிசன் பரிந்துரைகளின் அடிப்படையில் பள்ளிகளை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்" என்பது மட்டும்தான்.

'கும்பகோணம்' இன்று இப்பத்திரிக்கைகளின் பக்கங்களிலிருந்து மறைந்து விட்டது. 'டெகல்கா டேப்' ஜெயலட்சுமி கிடைத்துள்ளார். வாசகர்களும் சோகத்தை விட்டுவிட்டார்கள். 'கிளுகிளுப்பை' அடியொற்றுகிறார்கள். இந்த 'மாமா' உறவில்தான் அரசியல், சினிமா, இலக்கியம் பற்றிய பார்வையுடன் மக்களிடம் வினையாற்றுகின்றன பத்திரிக்கைகள்.

இப்பத்திரிக்கைகளின் வாசகர் தளத்தைச் சேர்ந்த ஒருவரை நிறுத்தி கும்பகோணம் பற்றிக் கேளுங்கள். "குழந்தைகளைப் பார்க்க விஜயகாந்த் தனியே வந்தார். சரத்குமார் நடிகர்களுடன் இணைந்து வந்தார். நடிகர் சங்கத்தில் இருவருக்குள்ளும் பிரச்சினை இருக்கு சார்" என்று கடைசி கட்ட நிலைமையை விளக்குவார்.

கும்பகோணம் சம்பவத்திற்கும் இந்த விளக்கத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று கேட்கிறீர்களா? அது தான் நாம் கேட்க விரும்பும் கேள்வியும்.

● இளந்தீபன்


படிப்பகம்




# குடந்தைப் படுகொலை: லாபவெறித் தீக்கு ஹோமம்!

ரதயாத்திரை, கரசேவை, செங்கல் பூசை என யாத்திரை கிளம்பினால் ஒரு சுற்றுக்குக் குறைந்தது ஒரு டஜன் குழந்தைகளையாவது பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தும் இந்துராஷ்டிரப் படையின் தளபதி கொலைகார அத்வானி கும்பகோணம் பள்ளியில் உருகி நின்ற காட்சிக்காக இந்த ஆண்டு சிறந்த நடிகருக்கான தேசிய விருதை அவருக்கு வழங்கலாம்.

குஜராத்தில் இசுலாமிய கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றைப் பிளந்து கருவறைச் சிசுவையும் வெளியே எடுத்து வெட்டி வீசி, தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகளையும் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திய பாசிச பார்ப்பனக் கும்பலின் (முன்னாள்) பாதுகாப்பு அமைச்சர், பள்ளிச் சுவரில் பொசுங்கி ஒட்டியிருந்த பிள்ளைகளின் முடியைப் பார்த்து 'போதும் இந்தக் கொடூரம்' என்று வருந்தினாராம். மக்களின் பிணங்களை அரசு அதிகாரத்தில் ஏறி அமர்வதற்கான படிக்கட்டுக்களாகப் பயன்படுத்திப் பழகிய அத்வானியின் உண்மையான வருத்தம் என்னவாக இருந்திருக்கும்?

கோத்ரா ரயில் பெட்டிகளைத் தாங்களே எரித்து கலவரத்தின் மூலம் குஜராத்தில் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது; கோவையில் ஒரே ஒரு போக்குவரத்துப் போலீசு கொலையைச் சாக்கிட்டு கலவரம் செய்து எம்.பி. சீட் ஜெயிக்க முடிந்தது; இப்போது கும்பகோணத்துச் சாவை அரசியல் ஆதாயமாக்க முடியாமல் 94 பிணங்களும் வீணாகப் போய் விட்டதே என்ற வருத்தம்தான் அத்வானியின் முகத்தை வாடச் செய்திருக்கும். குடந்தை வழக்கறிஞர் விவேகானந்தன் கூறும்போது "நல்லவேளை தீப் பிடித்த தனியார் பள்ளி ஒரு கிறித்தவ நிறுவனமாக இருந்திருந்தால் இந்நேரம் பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். கும்பல் கலவரத்தை உருவாக்கியிருக்கும்" என்றார். உண்மைதான்.

அப்படி இருந்திருந்தால் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதியளிப்பது பற்றி ஒரு தேசிய விவாதம் நடத்தப்படவேண்டும் என்று அத்வானியிடமிருந்து அறைகூவல் வந்திருக்கும். தனியார் கல்வி நிறுவனங்களைப் பற்றி தேசிய விவாதம் எதையும் இப்போது அத்வானி கோரவில்லை என்பதில் வியப்பில்லை.

உடம்பு சரியில்லாத அம்பானியைத் தரிசிக்க தனிவிமானத்தில் போய் இறங்கிய கும்பகோணம் மடத்து (காஞ்சி) சங்கராச்சாரி சொந்த ஊரில் நடந்த சாவுக்கு வரவில்லை. சுயநிதிக் கல்லூரி வசூல் தொகையை உட்கார்ந்து எண்ணியதில் சுளுக்குப் பிடிப்பு போலும். 'கெட்ட சாவுக்கு'ப் பரிகாரமாக இரண்டு மோட்ச தீபங்களை மட்டும் அனுப்பியிருந்தார்.



வழக்குரைஞர் விவேகானந்தன்.

லட்சக்கணக்கானோர் பாவங்களைக் கழுவிய மகாமகப் புண்ணியத் தலத்திலேயே பொசுங்கிப் போன இந்தப் பிஞ்சுகள் செய்த மகா பாவம் என்ன, இது விதியா - பூர்வ ஜென்ம பாவமா என்ற ஆன்மீக விளக்கங்களை நைசாகத் தவிர்த்து விட்டு லவுகீக நிவாரணத்தை அறிவித்தார்.

ஆரம்பக் கல்விக்கே தீக்குளித்துச் செத்த பிள்ளைகளின் உடன்பிறப்புகளுக்கு தனது சாஸ்த்ரா சுயநிதிக் கல்லூரியில் இலவசமாக என்ஜினியரிங் சொல்லித் தருவாராம் சங்கராச்சாரி. பக்கத்து ஊருக்கு பஸ் ஏறவே காசில்லாதவனிடம் "அமெரிக்கா வந்தால் எங்க வீட்லதான் சாப்பாடு" என்பது போன்ற விருந்துபசாரம்!

இதைவிட வக்கிரம் குடந்தையிலேயே சாதியின் பெயரால் சுவரொட்டி அடித்து ஒட்டியிருக்கும் கும்பகோணம் பார்ப்பனக் கும்பலின் நீலிக் கண்ணீர். இறந்தவர்கள் என்ன சாதி என்று யாரும் கேட்கவில்லை. அனுதாபம் தெரிவிக்க வந்த பார்ப்பனக் கும்பல், 'தமிழகத்தின் 45 லட்சம் பிராமணக் குடும்பங்களின் அஞ்சலி' என்று பள்ளிப் பிள்ளைகளின் பாடையேறி தனது ஓட்டு வங்கியை விளம்பரப்படுத்த வேண்டிய அவசியமென்ன? தமிழகத்தில் அக்கிரகாரத்துக் கணக்கைக் காட்டுகிறார்களே, தீ எரிந்த காசிராமன் தெருவில் அதிகம் வசிக்கும் பார்ப்பனர்களில் அக்னியில் பாய்ந்த அவாளின் கணக்கு என்ன? காட்டுவார்களா?

தனியார் லாபவெறிதான் அக்னி, அதில் நரபலியான சுள்ளிகள்தான் அடிப்படை வர்க்கத்துப் பிள்ளைகள்! இந்தத் தீயின் கொடூரம் பற்றிப் பேசாமல் "அக்னிதாக சாந்தி ஹோமம்" என்று இன்னொரு தீ மூட்டி உண்மையைத் திசை திருப்புகிறது குடந்தை பார்ப்பனக் கும்பல்.

● சுடர்விழி


படிப்பகம்

www.padippakam.com

# குடந்தைப் படுகொலை: பணம்பிடுங்கித்திருவிழாவின் பக்தர்கள்!

ஏப்ரல் மாதமே முடிவடைந்த பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்விற்கு, ஆகஸ்டு மாதம் வரை அட்மிஷன் நடக்கவில்லை. தேர்வுக் குளறுபடிகளால் மூன்றுமுறை மதிப்பீடு செய்யப்பட்டு விட்டன மாணவர்களின் விடைத்தாள்கள். ஜூன் மாதம் வரை அறிவிக்கப்படவில்லை, ராமன் கமிட்டியின் கல்லூரிக் கட்டண விகிதங்கள். வழக்கறிஞர்களின் வேலை நிறுத்தத்தால், தாங்களாகவே நீதிபதியிடம் வாதாடிய மாணவிகள். இடைக்காலத் தடை இருக்கும்போதே, 'அட்மிஷன்' நடத்தியதற்காக, மருத்துவக் கல்வி இயக்குநரகத்தை முற்றுகையிட்ட பெற்றோர்கள். அதிகரிக்கப்பட்ட கட்டண விகிதங்கள். தாமதமாகத் துவங்கிய 'கவுன்சிலிங்'.... என்ற தொடர் நிகழ்வுகள் நமக்கு ஒரு விசயத்தைத் தெளிவு படுத்தின.

அரசாலும் சுயநிதி முதலாளிகளாலும் வறுத்தெடுக்கப்பட்ட நடுத்தர வர்க்கத்தின் குமுறலை, கல்வி தனியார்மயத்திற்கு எதிராக அவர்கள் தெரிவிக்கக் கூடிய கருத்துக்களைப் பதிவு செய்யலாமென்ற நோக்கத்துடன் கவுன்சிலிங் நடக்கும் அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்தோம்.

ஆண்டுதோறும் நடைபெறும் இவ்'வீரபாண்டி'த் திருவிழாவிற்கு, வரவேற்று 'நோட்டீசு' தந்தவர்கள், சுயநிதிக் கல்லூரிகளின் மக்கள் தொடர்பு அதிகாரிகள். ''முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை'', ''முன்னாள் அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எங்களிடம் உள்ளனர்; ஆகவே, ஐ.எஸ்.ஓ. சான்றிதழும் பெற்றுள்ளோம்!'' கூவி விற்காத குறைதான். எல்லோர் கையிலும் வழுவழு தாளில் கலர் கலராகப் படங்கள். ''புல்வெளி, கட்டிடம், குளுகுளு வசதியுடன் வகுப்பறை'' என நட்சத்திர ஓட்டல் விளம்பரம் போல அச்சடித்திருந்தனர். குடந்தைப் படுகொலைக்குப் பிறகு, ''மாணவர்களுக்கு மட்டுமின்றி பெற்றோருக்கும் இன்சூரன்சு செய்யத் தயார்'' என்றது ஒரு கல்லூரி விளம்பரம். ''எங்கள் கல்லூரியில் சேர்ந்தால் காம்பஸ் இன்டர்வியூ வேலை உறுதி'' என்று சத்தியம் செய்து கொண்டிருந்த பி.ஆர்.ஓ.க்களில் பலர் கட்டாய ஓய்வில் வீட்டுக்கு வந்த அரசு அதிகாரிகள்!

'மகன் கேட்ட 'கோர்ஸ்' கிடைக்காததால் கணவனிடம் சண்டையிடும் மனைவி, ஒரு மரத்தடியில்; '10% முதல் 50% வரை கட்டணச் சலுகை' தந்து, ஆடிக்கழிவுத் துணியை, இந்தப் பெற்றோர்களின் தலையில் கட்டப் பார்க்கும் பி.ஆர்.ஓக்கள்; ஒரு மரத்தடியில்; 'ஊதினால் சோப்புக் குமிழி! இல்லையென்றால் பலூன்!' என ஈ.சி.ஈக்காகவும், ஐ.டி. கோர்ஸுக்காகவும் அப்பாவிடம் சண்டையிட்டபடி மகன்; ஒரு மரத்தடியில்; ''இடமில்லாவிட்டால் என்ன இங்கிருந்தபடி அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் படிக்கலாம்'' என்று ஆறுதல் கூறும் டுடோரியல் பிட் நோட்டீசுகள்... இந்தத் திருவிழாவில் கிளி ஜோசியக்காரர்கள் மட்டும் அனுமதிக்கப்படாதது பெருத்த அநீதியாகப் பட்டது.

''எனக்குத் தெரிய, விநாயகா மிஷன் சண்முகசுந்தரம் லாட்டரிச் சீட்டு அடிச்சான் சார்! காலேஜ் ஆரம்பிச்சான்! இன்னைக்கு பதினாறு லாரி! மகளோட கல்யாணத்துக்கு ஹெலிகாப்டர்ல போய், மலர் தூவுறான்! கல்வி, தனியார்ட்ட போனது தப்பு!'' என்ற சேலத்துக்காரரிடம், அவரது கதையைக் கேட்டோம்.

''ஆறு வருசம், ஜெயில்ல வச்ச மாதிரி, வருசத்துக்கு 85,000 செலவு பண்ணி, கேந்திரிய வித்யாலயாவுல படிக்க வச்சேன்! இனிமேலாவது பையன் சந்தோசமா இருக்கட்டும்னு 'லிபரோ' வண்டி வாங்கிட்டு வாசல்ல நின்னேன். என்ட்ரன்ஸ் எழுதிட்டு பையன் நொந்து போய் வாரான். என்னன்னு கேட்டா, 22 கேள்வி தப்பாக் கேட்டிருந்தாங்களாம், மார்க் போச்சுங்கிறான். நல்ல காலேஜ்ல, நெனச்ச க்ரூப் கெடச்சா சேர்ப்பேன். இல்லன்னா இன்னொரு 40,000 இம்ப்ரூவ்மென்ட், இன்னொரு வருசம் சேர்த்துட்டுப் போறேன்'' என்றார்.

பணத்தை ஒரு பொருட்டாகவே கருதவில்லையே என்று எண்ணி அவரது தொழிலைக் கேட்டால், கர்நாடகத்தில் போர்வெல் அடிப்பதாம். தண்ணீர் கிடைக்காத ஊரில் அதிர்ஷ்டத்தை நம்பி மீண்டும் மீண்டும் 50 அடி இடைவெளியில் 'போர்வெல்' அடிக்கச் சொல்லி, விவசாயிகளிடம் சம்பாதித்த காசு! தன்னுடைய கல்லாவில் சுயநிதிக் கல்லூரிக்காரன் போர் இறக்குவதையும் சகஜமாகவே எடுத்துக் கொண்டார் அந்த முதலாளி.

''தனியாருலதான், கல்விக்குத் தரமிருக்கு. உறுதியா வேலையும் கிடைக்கும். ஒண்ணும் கெடைக்காட்டியும், 'ஜேப்பியார்' தன்னோட 'காலேஜ்ல' ஒரு லெக்சரர் போஸ்டிங் கூடத் தரமாட்டாரா என்ன?'' என்றார் மற்றொரு தந்தை.

அடுத்து குறுக்கே வந்தார் ஒரு முன்னாள் பஞ்சாயத்துக் கமிசனர். நன்கொடைக் கொள்ளையால் ஏழை மாணவர்கள் உயர் கல்வி படிக்க முடியாத நிலை பற்றிக் கருத்து கேட்டோம். ''கஞ்சிக்கு வழியில்லாதவனுக்கு எதுக்கு சார் எஞ்சினியரிங் காலேஜ்?'' என்றார் அந்த உழைப்பால் உயர்ந்த உத்த

பொறியியல் கல்வி கவுன்சிலிங்:
**கனவுக்கு விலை கொடுக்க அலைமோதும் பெற்றோர்.**




படிப்பகம்

www.padippakam.com

மா். கும்பகோணம் படுகொலைக்கு அவர் சொன்ன காரணம் - விதி.

இன்னொரு அரசு ஊழியர் குறுக்கிட்டார். ''யாரையும் குற்றம் சொல்ல முடியாது. பெற்றோர் தான் பொறுப்பு'' என்றார். ''நல்ல பள்ளிக் கூடமா இல்லையா என்று பார்த்துச் சேத்துருக்கனும்'' என்ற வரிடம், ''அவர்கள் தினக் கூலிகள்'' என ஞாபகப்படுத்தினோம்.'' ''அவங்க தினக் கூலின்னா, நாங்க மாசக் கூலிங்க. நாங்க வரலியா கவுன்சிலிங்கிற்கு.'' என்றார் கோபத்துடன். நத்தம் கிராமத்துப் பெற்றோரை, இடுகாட்டிற்கு அனுப்பிய அதே தனியார்மயம்தான், தங்களையும் கவுன்சிலிங்கிற்கு அனுப்பியிருக்கிறது என்பது அந்த மூளையில் உறைக்க வாய்ப்பே இல்லை என்பதால் அவரிடமிருந்து நகர்ந்தோம்.

நல்ல பள்ளிக் கூடமா இல்லையா என்று பார்த்துச் சேர்க்காத குடந்தை பெற்றோர்களைச் சாடும் இந்த நடுத்தர வர்க்கப் பெற்றோர் நல்ல கல்லூரியைப் பார்த்துச் சேர்க்கத்தான் கவுன்சிலிங் கிற்கு வந்துள்ளார்கள். தேக்குமரத் திட்டம் போல வழுவழு தாளில் அச்சிட்டுக் காட்டப்படும் கல்லூரியைப் பார்த்துக் கிறங்கி லட்சம் லட்சமாய் இவர்கள் பணம் கட்டுகிறார்கள். எந்தப் படிப்புக்கு எதிர்காலம் உண்டு என்ற கேள்விக்கு சுயநிதிக் கல்லூரிக்காரன் கூறும் பதிலை நம்புகிறார்கள். நம்பாதவர்கள் சக 'அறிவாளிகளை'க் கலந்தாலோசிக்கிறார்கள்.

பிள்ளைகளோ பத்திரிக்கைகள், தொலைக்காட்சி, இணைய தளங்கள் வாயிலாகத் தாம் பெற்ற 'அறிவை' பெற்றோரிடம் பகிர்ந்துகொள்கிறார்கள்.

டெண்டுல்கரை வைத்துச் செய்யப் படும் பெப்சி விளம்பரத்திற்கும் இந்த வேலை வாய்ப்பு விளம்பரங்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை என்பது இவர்களுக்குப் புரிவதில்லை. ரேபான், நைகி, லீவைஸ் என பிராண்டுகளுக்குப் பின்னால் ஓடும் நுகர்வோனைப் போல, பிராண்ட்டு கோர்ஸுகளுக்குப் பின்னால் ஓடுகிறார்கள் இந்த அறிவாளிகள்.

பணத்தைக் கட்டிப் 'பிடித்துவிட்ட' காரணத்தினாலேயே முயலுக்கு மூணு கால் என்று வாதாடினர் சில பெற்றோர். ''ஆட்டோமொபைல் இண்டஸ்ட்ரி தான் ஸ்டெடியா இருக்கு.அதனால மெக்கானிகல் எடுத்திருக்கிறோம்'' என்றார் ஒருவர். உற்பத்தியான வாகனங்

**கல்வி, வேலைவாய்ப்பு என்ற தமது ஆடை ஆபரணங்களைக் களைந்து விட்டு தனியார் முதலாளிகள் அம்மணமாக எதிரில் வந்து நின்ற போதும் ''குடந்தை சம்பவம் வேறு, கவுன்சிலிங் வேறு'' என்பதே நாங்கள் சந்தித்த பெற்றோரின் கருத்தாக இருந்தது. பழனிச்சாமி ஒரு விபத்து, பாலகுருசாமியோ எதார்த்தம் என்று அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.**

கள் விற்பனையாகாமல் ''0% வட்டி... ஓடியா... ஓடியா...'' என்று அண்ணா சாலை முழுவதும் கூவும் பிரம்மாண்டமான விளம்பரப் பலகைகள் அவர் கண்களில்மட்டும் தென்பட மறுக்கிறது.

''படிச்ச படிப்புக்கெல்லாம், வேல கெடைக்கும்னு நெனைக்கக் கூடாது. எம் பையன் கூட பி.இ. ஃபைனல் இயர் படிக்கிறான். படிப்ப முடிச்ச உடனே கோழிக்கறி கடதான் வச்சுத் தரலாம்னு இருக்கேன்! பிறகு, வேல கெடச்சா பாத்துக்கலாம் என்று நம்மிடம் தத்துவம் பேசினார் ஒரு சுயநிதிக் கல்லூரியின் பி.ஆர்.ஓ. நாங்கள் அடுத்த பத்தடி தூரம் சென்றதும், அதே நபர் ''எங்கள் கல்லூரியில் படித்தால், கேம்பஸிலே வேலை கிடைக்கும். ஐ.டி.யில் சீட் இருக்கு!'' என்ற ரீதியில் பெற்றோர்களிடம் பேசி ஆள்பிடிக்கும் வேலையைத் தொடர்ந்தார்.

''வெறுமனே பி.இ. படித்தால், வேலையெல்லாம் கிடைக்காது'' என்கிறார் பாலகுருசாமி. ''போட்டி அதிகமாகிவிட்டது. மூணாவது வருசம் படிக்கிறப்பவே கம்ப்யூட்டர் படிக்க ஆரம்பிக்கனும். அப்படின்னாதான், மெக்கானிக்கல் படிச்சாக் கூட 'சாஃப்ட்வேர் இஞ்சினியர்' ஆகலாம்!'' என்று தனது கூற்றை நியாயப்படுத்துகிறார். ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் கற்றுத் தேர்ந்து, நீங்கள் போய் நின்றால், அறுபத்து ஐந்தாவது கலை ஒன்றைக் கண்டு பிடித்து அதனையும் கற்றுக் கொண்டு வரச் சொல்லுவார்கள். உடனடி ஆண்மை விருத்திக்காகப் பேருந்து நிலையங்களில், அவ்வப்போது விற்கப் படும் ''மத்தியப்பிரதேசம் பால்ராஜ் டானிக்''-ன் விளம்பரத்தில் உள்ள நேர்மையைக் கூட, இவர்களிடம் எதிர் பார்க்க முடியாது.

இவ்'வீரபாண்டி'த் திருவிழாவில், தொலைந்து போன அப்பாவிக் குழந்தைகளும் இருந்தார்கள்! 'எதை விற்று, மகனை படிக்க வைக்கப் போகிறோம்?' என்பதைச் சொல்லிவிட்டால், எங்கே தனது கையாலாகாத்தனம் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் முகத்தைத் திரும்பிக் கொண்டார் தருமபுரியைச் சேர்ந்த ஒரு தனியார் பேருந்து நடத்துனர்.

''எதற்காக 'மெக்கானிகல்' குரூப் எடுத்தீர்கள்?'' எனக் கேட்டதற்கு ''வேல கெடைக்காட்டியும், 'ஒர்க் ஷாப்' வச்சாவது பொழச்சுக்கலாமில்ல!'' என்று பதில் சொன்னார் மூலக்கடை அரசுப் பேருந்து ஓட்டுநரான ஒரு அப்பாவித் தந்தை..

கடைசியாக எதிர்ப்பட்டவர் தர்ம புரி மாவட்டம், திமிரி கிராமத்தைச் சேர்ந்த ஒரு துணி வியாபாரி! ''நம்ம விஜயகாந்த் தான் தைரியமா அவரு 'காலேஜ் நோட்டீசு'லேயே 'போட்டோ'வப் போட்டு, விளம்பரம் பண்ணி ருக்கார். அவரு காலேஜ்ல 'கேம்பஸ்' இருக்குதுல்ல? அவருதான் இப்போ நடிகர் சங்கத்தலைவரு! அவரு பார்த்து ஒரு வேல வாங்கித் தர முடியாதா என்ன?'' என்றார் வெகுளித்தனமாக.

இதைக்கேட்டு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. கொஞ்சம் யோசித்துப் பார்க்கும் போது பன்னாட்டு நிறுவனங்களை நம்புகின்ற ஆங்கிலம் பேசும் பெற்றோரின் அறிவைக் காட்டிலும் துணி வியாபாரியின் அறிவு மோசமானதாகப் படவில்லை.

இத்தனை ஏமாளிகள் இருந்தபோதும் கூட்டம் குறைந்து கொண்டே வருகிறது என்று கவலைப்படுகிறார் துணைவேந்தர் பாலகுருசாமி. ஆகஸ்டு இறுதி நிலவரப்படி சுமார் 20,000 இடங்கள் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் காலி. பல கல்லூரிகள் ஏலத்துக்கு வரக் கூடும் என்று எச்சரிக்கிறது தினமணி.

கேரள மாணவி ரஜினியின் தற்கொலையால் மனம் வெதும்பி, ''பணமில்லாத காரணத்தினால் எந்த மாணவனும் படிப்பை இழந்துவிடக் கூடாது'' என்ற உயரிய நோக்கம் கொண்ட நிதியமைச்சர் ப.சிதம்பரம், 7.5 லட்சம் ரூபாய் வரை உத்தரவாதம் இல்லாமல் கல்விக் கடன் தரச் சொல்லி அரசு வங்கிகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறார். அண்ணா பல்கலைக்கழக வளாகமெங்கும் ''பிடியுங்கள் பணத்தை'' என்று பெற்றோரிடம் அன்புத் தொல்லை செய்கிறார்கள் அரசு வங்கி அதிகாரிகள்.

படிக்கும்போதே, மாணவன் பெறும் கடனுக்கான வட்டியை தந்தை கட்ட வேண்டும்; படித்து முடித்த பிறகு,



படிப்பகம்

www.padippakam.com

வேலை கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் மகன் கட்ட வேண்டும். நடக்கிற காரியமா இது? மாதவட்டி மட்டும், சராசரியாக, கடைசி ஆண்டில் ரூ. 3600 வரும். ஆக, இந்தக் கல்விக் கடன் பெற்றோர்களின் நிகழ்காலத்தையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் காவு கேட்கிறது. எவ்வாறு விவசாயக் கடன், உரம், பூச்சி மருந்து, பம்புசெட் நிறுவனங்களைக் கொழிக்கச் செய்து, விவசாயியை தற்கொலைக்குத் தள்ளுகிறதோ அதைப்போல கல்விக் கடன் சுயநிதிக் கல்லூரி முதலாளிகளைக் கொழிக்கச் செய்து, வேலை கிடைக்காமல் வங்கிக்கு அசலைக் கட்ட முடியாமல் போகும் மாணவர்களைத் தற்கொலைக்குத் தள்ளுகிறது.

''மாணவி ரஜனியைப் போல பணம் கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொண்டு உங்களை நம்பிக் கல்லூரி கட்டி வைத்திருக்கும் சுயநிதி முதலாளிகளை வஞ்சிக்காதீர்கள். கடன் கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொள்ளுங்கள்!'' என்கிறார் ப.சிதம்பரம். வாராக்கடனும் அரசு வங்கிக் கணக்குத்தானே!

''இனிமேல் நுழைவுத் தேர்வே வேண்டாம். கடந்த ஆண்டே சீட் நிரம்பவில்லை'' என்று பத்றுகிறார் கருஞ்சட்டைத் தளபதி வீரமணி. இந்த ஆண்டு கவுன்சிலிங்கிற்கு வராமல் 'டிமிக்கி' கொடுத்து விட்ட சுமார் 10,000 பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்களை 2 லட்சத்தால் பெருக்கிப் பார்த்தால்தான் அவருடைய கவலை நமக்குப் புரியும். நுழைவுத் தேர்வென்ன, ''எந்தத் தேர்வும் வேண்டாம்; சான்றிதழும் வேண்டாம். எஞ்சினியரிங் படிக்க எட்டாம் வகுப்பே போதும்! எடு பணத்தை!'' என்று இவர்கள் அறிவிக்கவும் வாய்ப்பிருக்கிறது.

கல்வி, வேலைவாய்ப்பு என்ற தமது ஆடை ஆபரணங்களைக் களைந்து விட்டு தனியார் முதலாளிகள் அம்மணமாக எதிரில் வந்து நின்ற போதும் ''குடந்தை சம்பவம் வேறு, கவுன்சிலிங் வேறு'' என்பதே நாங்கள் சந்தித்த பெற்றோரின் கருத்தாக இருந்தது. பழனிச்சாமி ஒரு விபத்து, பாலகுருசாமியோ எதார்த்தம் என்று அவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

''இது சாமி இல்லை'' என்பதை இந்தக் கோயிலில் முண்டியடிக்கும் பக்தர்களிடம் ஆதாரபூர்வமாக நிருபித்து விட முடியும். ''அப்படியானால் வேறு சாமியைக் காட்டு'' என்று கேட்கிறார்கள், இந்த பக்தர்கள்.

● தளபதி

## குடந்தைப் படுகொலை:

# கை ய று நி லை



**''வெ**றுமனே பெத்துட்டா போதுமா? எங்க படிக்க வெக்கணும்னு வெவரம் வேணாம்? இந்தக் கிடங்குல போய் புள்ளைங்களத் தள்ளுவாங்களா யாரும், அறிவு இருக்க வேணாம்?''

- இவை மத்தியதர வர்க்கம் கேட்கும் கேள்விகள்.

சுற்றி வளைத்துப் பேசும் 'நாகரிகம்' தெரியாத, தீயில் எரிந்து போன ஐஸ்வர்யாவின் அப்பா ராமகிருஷ்ணன் கேள்விகளுக்குப் பட்டென்று பதில் சொன்னார்: ''அய்யா, இவங்கெல்லாம் பள்ளிக் கூடம்னா என்ன, வகுப்பறைங்க எப்படி இருக்கும், ஒவ்வொரு தளமும் எப்படி இருக்கணும், போகவர எத்தனை வழி, எத்தனை மாடிப்படி இருக்கணும்னு இப்ப வெவரமா பேசறாங்க. 'மாடியில கூரைக் கொட்டா போடலாமா'ன்னு கேக்கறாங்க. இதோ எங்க வீடே மண் தரை கூடப் பூசாத கூரைவீடு தான். எங்களுக்கு வேற என்ன தெரியும்? நாங்க வேற என்ன செய்ய?''

அவர்களில் பெரும்பாலானவர்கள் கும்பகோணத்தில் சந்தைக் கூலிகள்; சிறு தட்டுவண்டி வியாபாரிகள்; வீட்டுப் பெண்களோ கணவனோடு கூலி வேலைக்குப் போவார்கள்; வயல் வேலைகளுக்கும் போவார்கள். கும்பகோணம் உள்ளூர் ஏழைகள் தவிர, புறநகர் நத்தம் கிராமத்து மக்களின் வாழ்க்கையும் இதுதான். நாள் முழுக்கவும், இரவு நேரமும் உழைப்பு, ஏதோ கொஞ்சநேர ஓய்வு என்று வாழும் அவர்களின் முகங்களில் வாழ்வதற்கே படுகிற வேதனை, வலி தெரியும்.

முதல் குழந்தை பாலமகேஸ்வரியைப் பறி கொடுத்துவிட்டு, இரண்டாவது மகள் பரமேஸ்வரியைப் பார்த்து மனம்தேறி வரும் தாய் இலக்கியா பதில் கொடுத்தார்: ''நாங்க என்ன என்ஜினீரு, டாக்டருக்கா படிக்க வெக்க நெனச்சோம்? எங்கள மாதிரி ஆயிரக் கூடாதேன்னுதான் நெனச்சோம். அவ்வளவுதாங்க...!''

●●●

**ஆ**ம். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்விக் கண் திறக்க வேண்டும் என்று மட்டுமே நினைத்தார்கள். மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் போதிய ஆசிரியர்களை அரசாங்கம் போடுவதில்லை, அதனால் பிள்ளைகள் படிப்பதில்லை என்று கேள்விப்பட்டார்கள். நல்லபடியா படிக்கணும் என்று கவலைப்பட்டார்கள். நத்தம் பகுதி மக்களோ தங்கள் கிராமத்திலிருந்து பழனிச்சாமியின் பள்ளிக் கூடத்துக்குப் போகிற வழியிலேயே வேறு இரண்டு தனியார் பள்ளிகள் இருந்தும் அங்கெல்லாம் படிக்க வைக்க ஆயிரக்கணக்கில் செலவழிக்க வேண்டும், தங்கள் தகு



படிப்பகம்

www.padippakam.com

திக்கு ஒத்து வராது என்பதால் அங்கே பிள்ளைகளைச் சேர்க்கவில்லை.

போக வர மாதம் முப்பதே ரூபாயில் வேன் ஏற்பாடு செய்வதாக ஸ்ரீ கிருஷ்ணா பள்ளி நிர்வாகம் சொன்னபோது அதுவே போதுமென்று முடிவு செய்தார்கள். 25 பேர் மட்டுமே பயணம் செய்யக்கூடிய 'ரேஞ்சர் வேனி'ல் 69 பிள்ளைகள் புளிமூட்டை மாதிரி அடைத்துத் தான் கொண்டு போவார்கள். ஆனால், நத்தம் மக்களுக்கு அதுவே பெரிய வசதி!



பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்: ராமகிருஷ்ணன், பொய்யாமொழி.

களுக்கு அப்படித்தான். "அந்தப் பள்ளிக்கூடத்திலா சேர்ப்பார்கள்" — கேட்பது சுலபம். எரிந்ததற்குப் பிறகு கேவலப்பட்டார்களே மக்கள், அதற்கெல்லாமும் கூட அவர்கள்தான் பொறுப்பா?

எல்லாம் முடிந்து விட்டது. கொண்டு போய்ப் புதைக்க சுடுகாட்டுக்குப் போனார்கள் நத்தம் கிராம மக்கள். 'சீனி மிட்டாய்ச் சிரிப்புக்கெல்லாம் / சிதை வெச்ச நேரத்துல / எஞ்சீவன் செத்துருச்சே...' என்று ஆடி ஆடிச் சென்ற தூளிகளின் பின்னால் ஒப்பாரியோடு ஊரே ஓடியது. கல்லும் முள்ளும் துணிகளைக் கிழித்த கருப்பூர்ப் பாதை வழியே போய்ப் புதைத்து விட்டு வந்தவர்கள் ஆத்த மாட்டாமல் நேராகப் போய் சுடுகாட்டுக்குச் சரியான பாதை போடச் சொல்லி கூட்டு ரோட்டில் மறியல் செய்தார்கள்.

நத்தம் கிராம மக்கள் சொன்னார்கள்: "நாங்க கும்பகோணத்துல கால்வாய்க் கரையோரம் குடிசையிலயும் நாத்தத்துலயும் தான் கெடந்தோம். அங்கேயிருந்து இந்த வயக்காட்டுப் பக்கம் விரட்டியடிச்சாங்க. நட்டுவாக்கிலி, பாம்பு தெனமும் மேயுற இந்த எடத்துல வாழுறோம்... இங்கேயே பள்ளிக்கூடம் கட்டிக் குடுங்கன்னு கேட்டோம். அரசாங்கம் கண்டுக்கவேயில்லை. நாங்க வேற என்ன செய்ய?"

பள்ளிக்கூடம் பற்றி எரிந்த அன்று உள்ளூர்வாசிகளுக்கே எல்லாம் முடிந்து கருகிப்போன பின்பு தான் தெரியும். முதல் செய்தியை சந்தைக்கு யாரோ சொல்லி, அப்புறம் தெருத்தெருவாகப் பரவி, பிறகு தான் குழந்தைகளின் பெற்றோர்களுக்கே தெரியும்.

கருகிப்போன அன்பழகனின் தந்தை பொய்யா மொழியும், அருகிலிருந்த வீட்டுப் பெண்களும் அலறிக் கொண்டே இதைச் சொன்னார்கள்: நத்தத்துலேர்ந்து "பள்ளிக்கூடம் போனோம். எல்லா புள்ளைகளும் போயிட்டாங்களேன்னு போலீஸ்காரன் தெரிஞ்சே பொய் சொல்லி விரட்டுனான். பிழைச்சு வெளியே போன பிள்ளைங்க எங்கெங்கேயோ யார் யாரோட வீட்டுல்லாமோ தங்கியிருந்தாங்க. அங்க எல்லாம் ஓடுனோம். ஒவ்வொரு முகமாத் தேடினோம்."

"அங்க இல்லையேன்னு பதறுனோம். வீட்டுக்கே போய்ச் சேர்ந்துருக்குமோன்னு மறுபடி நத்தம் வந்து தேடுனோம். போக 4 மைல், வர 4 மைல். 'பள்ளிக்கூடத்துலே எரிஞ்சு கிடக்குதாம் புள்ளைங்க, ஓடு, ஓடு'ன்னாங்க, ஓடினோம். அங்க போனா, எல்லாம் கரிக்கட்டையா கெடக்கு. தேடினோம். அங்கயும் கிடைக்காதவங்க - ஆஸ்பத்திரிக்கு ஓடினோம். வாழை இலை மேல, ஐயோ கோராம, கிழங்கு உரிச்சாப்போல வெந்து கிடந்த துல தேடினோம். கேக்காதீங்க. திரும்பத் திரும்பச் சொல்ல முடியலையைய்யா..."

எரிந்து அடுத்த அரை மணிக்குள் நடராஜ், செல்வம் போன்ற ஆட்டோ டிரைவர்கள், ஜான் என்று பாசமாய் அழைக்கப்படும் கமலக்கண்ணன், ரமேஷ், மூர்த்தி, பாண்டுரங்கன், பாலகிருஷ்ணன் போன்றவர்கள்தான் எரிகிற தீயிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்றினார்கள். இவர்களில் சிலர் தங்கள் பிள்ளைகளைப் பற்றி அப்புறம் தான் விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள். அதில் சிலருக்கு தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்து விட்டதே பின்னால்தான் தெரியும்.

அரசு ஆஸ்பத்திரியில் - இறந்து போன குழந்தைகளைச் சுற்றிக் கொடுக்கத் துணி கூட இல்லை; சில குழந்தைகளை எடுத்துக் கொண்டு பெற்றோரே தஞ்சை அரசு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். தனியார் நர்சிங் ஹோம் எதுவும் மருத்துவம் பார்க்க முன்வரவில்லை.

ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கடுக்காகவா துன்பம் வந்து சேரும்? ஏழை

அந்த மறியல் நேரத்தில்தான் அண்ட சராசர அக்கிரமங்களையும் தனிஒரு ஆளாய்த் தூளாக்கும் ரமணா - கஜேந்திரா - கேப்டன் விஜய்காந்த் நத்தம் கிராமம் நோக்கி வந்து கொண்டிருந்தார். மறியல் செய்தி கேள்விப்பட்டதும் அரண்டு போய் அப்படியே ஒரே தாவாகத் தாவி கும்பகோணம் பக்கம் விட்டார் ஜூட்.

சுடுகாட்டுப் பாதையென்ன, இன்னமும் கூட நத்தம் கிராமத்துக்கே முழுச் சாலை கிடையாது. அனுதாபத் தீ அடங்கி விட்டது. சாலையும் பாதியில் நிற்கிறது; ரோலர் போட்டுச் சாலையாக அமுக்கப்படாததால் கூரான கிராவல் கற்கள் கிராம மக்களின் கால்களைத் தினமும் பதம் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

●●●

**ந**த்தத்தில் மாற்றுப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டிய கலெக்டர் தற்காலிகமாகப் பள்ளிக்கு ஒரு இடமும் போட்டார். பள்ளியைச் சுற்றிப் பார்த்தோம். 20 அடிக்கு 20 அடி - சன்னலே இல்லாத நெல் கொட்டி வைக்கும் கிடங்கு. மறுபடியும் ஒரு கிடங்கா?

எங்கள் பார்வையைப் புரிந்து கொண்ட ஒரு பெரியவர் கேட்டார்: "நாங்க வேறென்ன செய்ய?"

● குப்பண்ணன்
(உதவி: பு.மா.இ.மு., குடந்தை)



படிப்பகம்

www.padippakam.com

# சாதிவெறி:

# சுடுகாட்டுக் கட்டிலில் சாக மறுக்கும் பிணம்!

ஒரு நண்பரைச் சந்திப்பதற்காக அருகில் உள்ள ஊருக்குச் சென்றேன். அங்கு ஊர்ப் பஞ்சாயத்து நடக்க இருந்தது. அந்தக் கூட்டத்தில் நான் பார்க்கப் போனவரும் இருந்ததால் பஞ்சாயத்து முடியவும் போவோம், நீங்களும் உட்காருங்கள் என்று கூறினார்.

பஞ்சாயத்தைக் கூட்டிய வாதி எழுந்து கிராமத்தை வணங்கிவிட்டு தன் தரப்பு வாதத்தை வைத்தார். ''என் மகன் இறந்து மூன்று நாள் ஆகிறது. என் மகனைக் கட்டிலில் வைத்து தூக்கிப் போயி அடக்கம் செய்து விட்டு, கட்டிலை சுடுகாட்டில் போட்டுவிட்டு வந்திட்டோம். அதை எடுத்து வரச் சொல்லி நானும் மூன்று முறை போய் சொல்லிவிட்டேன். இவர்கள் யாரும் எடுத்து வராததால், சின்னப் பயல்கள் கிரிக்கெட் விளையாட கட்டில் சட்டத்தை உடைத்து எடுத்துச் சென்று விட்டார்கள். கட்டில் வேறு ஒருவருடையது. எனக்கு கட்டில் வேணும். கிராமம் கேட்டுக் குடுங்க'' என்று தாழ்த்தப்பட்டவர்கள் மீது வழக்கைத் தொடுத்துவிட்டு அவர் அமர்ந்தார்.

தாழ்த்தப்பட்ட சுப்பையனிடம் கிராமம் கேட்டது: ''ஏண்டா, கட்டிலை எடுத்துவந்து சேர்க்கவில்லை?''

சுப்பையன் எழுந்து கிராமத்தை வணங்கிவிட்டு, ''கிராம ஊர்வேலைய போன வருசம் நான் செஞ்சேன். இந்த வருசம் என் சித்தப்பாதான் செய்யனும். அவரைக் கேளுங்கள்'' என்று கூறி ஒதுங்கிக் கொண்டார்.

கிராமத்தார் அவன் பேச்சில் நியாயம் உள்ளதாக உணர்ந்து ஏற்றுக் கொண்டனர். மொக்கையன் தான் அவருடைய சித்தப்பா. அவரைக் கூப்பிட்டு, ''ஏண்டா மொக்கை, இந்த வருசம் ஊர்வேலை ஒன்னதுதானே, ஏன் கட்டிலை எடுத்து வரலை?'' என்றார்கள்.

மொக்கையன் எழுந்து வணங்கிவிட்டு, ''போனமாசம் வேலுச்சாமி தேவர் வீட்டில் மாடு செத்தப்போ எனக்கு கறியில் பங்கு தரலை. தோல் விற்றதில் பங்கு தரலை. எப்படி ஊர் வேலை செய்யுரது?'' என்று கேட்டார்.

''ஏலே அகராதி புடிச்ச பயலே, கறியும் தோலில் பங்கும் தரலைனா கிராமத்தில் வந்து சொல்லியிருக்கனும். சொன்னயா?''

''இல்லை.''

''கட்டில தூக்கி வராததுக்கு நீதான் பொறுப்பு. கட்டில் கிரயம் 300 ரூபாய் கட்டு'' - என்று தீர்ப்பு கூறினார்கள். ''எனக்குக் கறியும் வேணாம், ஊர் வேலையும் வேணாம், ஆளை விடுங்க'' என்றார் மொக்கையன்.

''பாருடா எந்தத் தெண்டி பேச்சு பேசுறான்... ஏலே ஊரு வேல செய்யலைன்னா ஊருல எப்பிடிக் குடிதண்ணி எடுப்ப, வயல்ல எப்பிடி நடப்ப?'' என்றார் ஒருவர்.

''ஊர் வேல செய்யலன்னு நீ மட்டும் சொன்னா விட்டுருவோமா? ஒங்க வம்சத்தில உள்ளவன் எந்த எந்த ஊருல இருக்கானோ அத்தனப் பேரையும் கூட்டிவந்து எழுதிக் கொடுத்தால்தான் விடுவோம்'' என்றனர் ஊர்ப் 'பெரியவர்கள்'.

''இன்னக்கி இவன் வேணாமின்னு எழுதிக் கொடுப்பான். நாளைக்கி இன்னொருத்தன் வேணாமின்னு சொல்லுவான். இப்படியே போனா அப்புறம் ஊர் வேலை யாரு செய்யிறது, எழுதிக் கொடுத்தா விட்டுர முடியுமா?'' என்று பெரியவரின் பேச்சை மறுத்து ஒருவர் பேசினார்.

மொக்கையன் ஏதும் பேசாமல் நின்று கொண்டிருந்தார். வயது 40 இருக்கும். ''ஏலே, பேசத் தெரியாத கிறுக்குப் பயலே, இனிமே ஊர்வேலய ஒழுங்கா செய்யுறேன்னு சொல்லிட்டுப் போடா'' என்று சொல்லிக் கொடுத்தார் ஒரு ஆதிக்க சாதிக்காரர்.

''இவனுக்குப் பேசத் தெரியாதாக்கும். ஊரக் கேன புடிக்கிறான். கொழுப்பு ஏறிப் போச்சு. அதனால்தான் ஊர் வேல வேணாமுன்னு சொல்லுறான்'' என்று சாதி ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்துகிற மாதிரி இன்னொருத்தர் பேசினார்.

தொடர்ந்து மொக்கையன் மவுனமாகவே இருந்தார்.

''ஏலே மொக்கையா, ஏதாவது வாயத் தொறந்து பேசுடா. மவுனமா இருந்து காரியம் சாதிக்காத'' என்று பெரியவர் அதட்டினார்.

300 ரூபாய் அதிகத் தொகையாக இருப்பதால் குறைக்கச் சொல்லி, தாங்கும் தாங்காது என்று சொல்லிக் கும்பிட்டு விழுகச் சொல்லி ஒருவர் ஆலோசனை சொல்ல, அதன்படி மொக்கையன் கும்பிட்டு விழுந்தார்.

''அபராதத் தொகையைக் கொறைக்க முடியாது. 300 ரூபாயக் கொண்டுவா'' என்று தண்டனையை உறுதிப்படுத்தினார் ஆரம்பத்தில் பேசிய பெரியவர்.

''கும்புட்டு வுளுந்து கெடு கேட்டுக்கடா'' என்றார் ஒருவர். அதன்படி கும்பிட்டு விழுந்து ஒருவாரம் கெடு கேட்டார் மொக்கையன்.

''ரூபா என்னா ரூபா. அவன் ஊரு வேலயச் செய்ய முடியாதுன்னு சொல்லுறான். அதப்பத்தி முதல்ல பேசுங்கப்பா'' என்று ஒருவர் வலியுறுத்தினார்.

இப்பேச்சை உறுதிப்படுத்தி, ரூபாய் 300-ம், அவர் வம்சத்தில் உள்ளவங்க எங்க எங்க இருக்காங்களோ அவங்க எல்லாத்தயும் கூட்டிக்கிட்டு ஒரு வாரத்தில் வந்து சேரணும் என்றார் காரியக்காரர்.

மொக்கையன் மீண்டும் கும்பிட்டு விழுந்தார். ''எங்க வம்சத்துக்காரங்க எங்க எங்க இருக்கறங்களோ அங்கெல்லாம் போயி கூட்டி வர முடியாது. நான் மட்டும் ஊர் வேலை வேணாமுன்னு எழுதித் தாரேன்'' என்று சொல்லி மறுபடி ஒரு முறை காலில் விழுந்தார்.

''மனுசனுக்கு மனுசன் காலில் விழ வேண்டாம்டா. எங்களுக்கு அசிங்கமா இருக்கு. ஒழுங்கா ஊர்வேலயப் பாத்தாப் போதும்'' என்று அரை ஜனநாயகம் பேசினார் ஒருவர்.


''300 ரூபாக்கு கெடுகேக்குற ஒன்ன நம்ப முடியாது. ஒரு ஆள் சாமீன் தரணும்'' என்றார் இன்னொருவர்.

ஆதிக்கச் சாதியில் பிறந்தாலும் சொந்த வீடு இல்லாததால் காலனி வீட்டில் ஒத்தி வாங்கிக் குடியிருப்பவர் ஒருவர் சாமீன் கொடுத்தார். ஒருவாரத்தில் 300 ரூபாயும், மொக்கையன்



படிப்பகம்

www.padippakam.com



வகையறாக்கள் எந்த ஊரில் இருந்தாலும் அனைவரையும் கூட்டிவந்து எழுதியும் தரணும். அனைவரையும் கூட்டிவரத் தவறினால் ஊர்வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் பஞ்சாயத்தார் ஏகமனதாகத் தீர்ப்பு சொன்னார்கள்.

●●●

**வீ**டு வந்த எனக்கு வெகுநேரம் இரவு தூக்கமில்லை. பல கேள்விகள் என் மூளையில் மின்னலாய்த் தாக்கின. மொக்கையன் ஊர்வேலை வேண்டாம் என்று சொன்னால், மொக்கையனைத்தானே எழுதித்தரச் சொல்லிக் கேட்க வேண்டும்; ஏன் அவர் வகையறா எல்லாத்தையும் எழுதித்தரச் சொல்லிக் கேட்க வேண்டும்? ஏன் அவர் வகையறா எல்லாத்தையும் வெளியூர் போய்க் கூட்டி வரவேண்டும்? பதிலுக்கு மொக்கையனும் ''ஊர்ல உள்ளவங்க எங்கெங்க இருக்காங்களோ அவுங்க எல்லாத்தையும் நீங்களும் கூட்டி வருவீங்களா?'' என்று கேட்டால் நிலைமை என்னென்ன ஆகும்? கலவரம் வேண்டாம் என்றுதான் மொக்கையன் மவுனமாக இருந்து விட்டாரோ?

மனிதனுக்கு மனிதன் காலில் விழவேண்டாம், வெட்கமா இருக்கிறது என்று சொன்னவருக்கு, ''ஊர் வேல வேண்டாம், ஆளை விடுங்க'' என்று மொக்கையன் சொன்னதை ஏற்றுக் கொள்ள ஏன் மனம்இல்லை? அப்படி மனம் இல்லாத அவர்கள் ஊர்ப்பண்ணைகளா என்றால், அதுவும் இல்லை - நித்தக் கூலிகள்; மிஞ்சிப் போனால் 3-4 ஏக்கராவுக்குச் சொந்தக்காரர்கள்; கிணற்றில் தண்ணீர் இல்லை, ஊரில் வேலை இல்லாததால் மகன்கள் வேலைதேடி வெளியூர் சென்று விட்டனர்; வயதானவர்களும், வேலை செய்ய முடியாதவர்களும்தான் ஊரைக் காத்துக் கிடக்கிறார்கள்.

மூவாயிரம் வருசங்களுக்கு முன்னால், போக்குவரத்து இல்லாத காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி இல்லாத காலத்தில், ஒரே ஊருக்குள் எல்லாத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட குலத்தொழில் இன்றும் நீடிக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் என்ன நியாயம் உள்ளது?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்களே வேலைதர முடியாமல் இப்போது உங்களுக்கே வேலையில்லாமல் நீங்களே ஊரைக் காலி செய்துவிட்டு ஓடும்போது, உன்னை நம்பிப் பிழைக்காமல் உன்னைப் போல் நகரங்களுக்கு ஓடிப்பிழைக்கும் ஆட்களைப் பார்த்து ''எனக்கு அடிமை வேலை செய்!'' என்று சொல்ல, கட்டளை போட உனக்கு என்ன உரிமை இருக்கிறது?

ஓடிப்போய்ப் பிழைக்கிற இடத்தில் சாதிக்குத்தக்கவாறுதான் வேலை செய்கிறாயா? அங்கு உனக்கு அடிமை வேலைக்கு ஆள் வைத்திருக்கிறாயா? கூலிக்காக என்ன வேலையும் செய்வது நினைவில் இல்லையா?

காலனி வீட்டுக்கு மூன்று முறையும், பஞ்சாயத்தைக் கூட்ட வீடுவீடாகவும் போன நீ, ஒரே ஒருமுறை ஏன் சுடுகாட்டிற்குப் போய் கட்டிலைத் தூக்கிவர முடியவில்லை? சாதி கவுரவம்தான் என்றால், அதற்கான அடித்தளம் உனக்கு என்ன இருக்கு? உன் சம்சாரித்தனம் என்னா ஆச்சு?

செயலலிதா கிடா வெட்டக்கூடாதுன்னு சொன்னவுடனே ரோசமில்லாம வாலை மடக்கிட்டியே! அந்த ஒரு ஊரில் மட்டுமில்ல, உசிலை வட்டம் முழுக்கவுமே ஏறக்குறைய ஒருசதவீதம் கம்மியா நூறு சதம் இதே நெலமை தான். இந்த அளவுக்குச் சாதி அடக்குமுறையும் செய்துவிட்டு வெளியுலகுக்கு இந்தப்பகுதி ஓட்டுக் கட்சித் தலைவனுங்க, ''இங்க எல்லாம் சாதி ஆதிக்கம் இல்லே. நாங்க தாயா புள்ளையா இருக்கிறோம்''னு சொல்ல எவ்வளவு தைரியம் வேண்டும்?

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலத்தில் உள்ளவங்களுக்குத் தாங்கள் செய்வது பெருமையாகப்படுகிறது. ஆனால் உலகமே ''சாதிவெறி பிடித்த காட்டுமிராண்டிகளே'' என்று திட்டுகிறது. புழுத்து நாறும் சலம் பிடித்த மூக்குக்கு எங்கே நாற்றம் தெரியப் போகிறது?

எங்க ஊரில் பரவாயில்லை. 'விவசாயிகள் விடுதலை முன்னணி' உள்ள ஊராக இருப்பதால் ''அடிமைத் தொழில் செய்ய முடியாது'' என்று சொல்ல முடிகிறது. கொஞ்ச நாளைக்கு முன்னால் என் ஊர் தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவரிடம் ஆதிக்கச் சாதி பெரிசு ஒன்று ''ஏண்டா கருப்பு உங்க அப்பன் செத்துட்டான்ல, இனிமே நீ தான ஊருல மேளம் அடிக்கணும்'' என்று கேட்டது. அதற்கு அந்த இளைஞர் சொன்னார்: ''எங்க அப்பாவுக்கு மேளம் அடிக்கத் தெரியும், அடித்தார். எனக்கு கம்ப்யூட்டர்தான் அடிக்கத் தெரியும். ஊர்ல கம்ப்யூட்டர் வாங்கிப் போடுங்க, தேவைப்பட்டா வந்து அடிக்கிறேன்'' என்றார். அதற்கு அந்தப் பெரிசு, ''பேசுவீங்கடா, பேசுவீங்க. நீங்க எந்த தாட்டியத்துல (வி.வி.மு. அமைப்பை மறைமுகமாகக் கூறுகிறார்) பேசுறீங்கன்னு தெரியாமவா இருக்கு. காலம் கெட்டுப் போச்சு, என்னா செய்யுறது''ன்னு முனகிக் கொண்டே போனார்.

●●●

**இ**ந்த நிலையை மற்ற ஊருக்கும் விரிவாக்க வேண்டும். நமது உழைப்பு போதாது என்ற குறை சட்டென்று விளங்கியது. மனப்பாரம் கொஞ்சம் குறைவது போலிருந்தது. கூடவே மொக்கையன் நினைவு வந்தது - அவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும்?

● **குருசாமி, வி.வி.மு., உசிலை**



படிப்பகம்

www.padippakam.com

# வழக்குரைஞர் போராட்டம்:
# கூண்டிலேற்றுவோம் நீதித்துறையை!

சென்னை உயர்நீதி மன்றம் வழக்குரைஞர்கள் மீது விதித்திருந்த 25 கட்டளைகள் விலக்கிக் கொள்ளப்பட்டதையடுத்து வழக்குரைஞர்களின் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கீழமை நீதிமன்ற வழக்குரைஞர் சங்கங்களின் கூட்டமைப்பு தனது அறிவிப்பில் இரண்டு விசயங்களைத் தெளிவுபடுத்தியிருக்கிறது.

1. ஒவ்வொரு நீதிமன்றத்திலும் நீதிபதிகளின் ஊழலைக் கண்காணிக்க 5 வழக்குரைஞர்கள் கொண்ட குழுவை அமைப்பது. நீதிபதிகளுக்குத் தரகர்களாகச் செயல்படும் வழக்குரைஞர்களைப் புறக்கணிப்பது 2. சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி மீதான நடவடிக்கைக்காகப் போராடுவது - இவ்விரண்டு தீர்மானங்களையும் கூட்டமைப்பின் செயலர் தோழர் திருமலைராசன் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞர் சங்கமும் சுபாஷன் ரெட்டியின் நீதிமன்றத்தைப் புறக்கணிப்பது என்ற தனது முடிவைத் தெளிவுபடுத்தியுள்ளது.

வழக்குரைஞர்களின் போராட்டத்திற்குக் காரணமாக இருந்த மையமான பிரச்சினை எது என்பதை இவற்றிலிருந்து சாதாரண வாசகனும் புரிந்து கொள்ள முடியும். ஆனால் உச்சநீதி மன்றத்தால் இதைப் 'புரிந்து' கொள்ள முடியவில்லை. வழக்குரைஞர்கள் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு செப்.3 அன்று வழக்குரைஞர் சங்கத்துக்குத் தாக்கீது அனுப்பியுள்ளது உச்சநீதி மன்றம்.

வழக்குரைஞர் போராட்டம் தொடர்வதற்குக் காரணம் சுபாஷன் ரெட்டியின் ஊழல்தான் என்பதை மக்களுக்கு இருட்டடிப்புச் செய்வதில் நீதித்துறையும் பத்திரிக்கைகளும் அரசும் வெற்றி பெற்றுள்ளன என்றே சொல்ல வேண்டும்.

மதுரையில் உச்சநீதி மன்றத்தின் கிளை தொடங்கப்படுவதை எதிர்த்து தங்களுடைய தொழில், வருமானம் ஆகியவற்றை மட்டுமே முன்னிறுத்தி பிரபாகரன் தலைமையில் நடத்தப்பட்ட சென்னை வழக்குரைஞர்களின் போராட்டம் முட்டுச் சந்தில் சிக்கியது. தலைமை நீதிபதியின் கையாளே பிரபாகரன் என்ற உண்மையை உணர்ந்தவுடனேயே சென்னை வழக்குரைஞர்கள் பிரபாகரனைத் தூக்கியெறிந்தனர். பிறகு பிரபாகரனின் ரவுடித்தனம் நீதிமன்ற வளாகத்திற்குள் அரங்கேறியது.

ரவுடிகளை ஊடுருவச் செய்து தொழிலாளர் போராட்டங்களுக்குள் கலவரத்தை உருவாக்கி, பிறகு 'அமைதி'யையும், சட்டம் - ஒழுங்கையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் போலீசு தலையிடுவதைப் போன்ற உத்தியை அச்சுப் பிசகாமல் பிரயோகித்திருக்கிறார் சுபாஷன் ரெட்டி. ஒழுங்கையும் நன்னடத்தையையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் 25 கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன; உயர்நீதி மன்ற வளாகத்தில் போலீசு குவிக்கப்பட்டது.

ஆனால் இந்தத் தந்திரம் ரெட்டி எதிர்பார்த்ததற்கு நேரெதிரான விளைவையே தோற்றுவித்தது. தமிழகம் தழுவிய அளவில் வழக்குரைஞர்களின் ஒற்றுமைக்கும் போராட்டத்திற்கும் வழி வகுத்தது இந்த நீதிமன்றப் பாசிசம். போராட்டத்தின் காரணமாக 25 கட்டளைகள் போய்விட்டன. ஆனால் சுபாஷன் ரெட்டி போகவில்லை. நீதிபதிகளின் ஊழல் என்ற மையமான பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.

இந்தியாவின் எல்லா உயர்நீதி மன்றங்களையும் உச்சநீதி மன்றத்தையும் சேர்ந்த சுமார் 650 நீதிபதிகள் கொண்டிருக்கும் அதிகாரம் வானளாவியது. இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை உச்சநீதி மன்ற நீதிபதிகள் கொண்ட குழு விசாரித்து, குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கருதினால் நாடாளுமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மையினர் முடிவெடுத்தால் மட்டும்தான் ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியையே பதவி இறக்கம் செய்ய முடியும். 1947-க்குப்பின் எந்தவொரு நீதிபதியும் இவ்வாறு பதவி இறக்கப்பட்டதில்லை.

தம்முடைய பதவிக்காலத்தை நீட்டித்துக் கொள்வதற்காக பிறந்த தேதியைத் திருத்தி ஃபோர்ஜரி செய்ததாக முன்னாள் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி ஆனந்த், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சிவப்பா ஆகியோர் மீது ஆதாரபூர்வமாகக் குற்றம் சாட்டப்பட்டது; நடவடிக்கையில்லை.

3 கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதிகள் பெண் வழக்குரைஞர்களுடன் குடித்துவிட்டுக் கும்மாளமடித்தது பத்திரிக்கைகளில் நாறியது. நீதிபதிகள் மீது நடவடிக்கை இல்லை. குற்றம் சாட்டிய பத்திரிக்கைகள் மீது 65 நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் போடப்பட்டன.

அரசு வேலைகளை விலை பேசி விற்ற அரியானா நீதிபதிகள், ''வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்றால் படுக்கையறைக்கு வா'' என்று பெண் டாக்டரை அழைத்த ராஜஸ்தான் நீதிபதி... என பட்டியல் நீளும்.

செரினா வழக்கு, பிரேமானந்தா வழக்கு, மாவட்ட நீதிபதிகள் நியமனம் ஆகிய அனைத்திலும் கோடிக்கணக்கில் சுருட்டியிருக்கிறார் 'வசூல்ராஜா சுபாஷன் ரெட்டி' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார்கள் தமிழக வழக்குரைஞர்கள்.

எதைச் சொல்லி என்ன ஆகப் போகிறது? 100 கோடி மக்கள் மீது நன்னடத்தையை நிலைநாட்டும் அதிகாரம் படைத்த நீதிபதிகளுக்கு மட்டும் நடத்தை விதி என்று ஒன்று கிடையாது. பார்ப்பனர்களுக்கு மனுநீதி வழங்கிய அதிகாரத்தைக் காட்டிலும் கேள்விக்கிடமற்ற அதிகாரத்தையும் சலுகைகளையும் நீதிபதிகளுக்கு வழங்கியிருக்கிறது இந்திய அரசியல் சட்டம்.

ஒரு உயர்நீதி மன்ற / உச்சநீதி மன்ற நீதிபதி லஞ்சம் வாங்குவதை கையும் மெய்யுமாகப் பிடித்தாலும், அதனை வீடியோ படமெடுத்து ஆதாரமே வைத்திருந்தாலும் அவற்றை வெளியிடுவது நீதிமன்ற அவமதிப்பாம்! ''நீதிமன்றத்தை அவமதிப்பவருடைய குற்றச்சாட்டு உண்மையே என்றாலும் நீதிபதியை அமவதிக்கின்ற காரணத்தினால் அது பொய் என்றே கொள்ளப்படும்'' என்று கூறுகிறது ஒரு உச்சநீதி மன்றத் தீர்ப்பு. (1971, AIR, Para 18, p.230)

காவிரி நீர்ப் பிரச்சினையில் உச்சநீதி மன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட மறுக்கும் கர்நாடக அரசு மீதோ, நீதிமன்ற


படிப்பகம்

www.padippakam.com



நீதிபதிகளுடைய போலி கவுரவத்தின் காற்றைப் பிடுங்குகிறார்கள் வழக்குரைஞர்கள்.

உத்தரவுகளைத் தம் கால்தூசுக்குச் சமமாக மதிக்கும் போலீசார் மீதோ, குறைந்தபட்ச ஊதியம் - தற்காலிகப் பணியாளர் பணிநிரந்தரம் போன்ற எண்ணற்ற பிரச்சினைகளில் நீதிமன்ற உத்தரவை மீறும் மத்திய, மாநில அரசுகள் மீதோ நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை. ஆனால் கர்நாடக நீதிபதிகளின் காமக் களியாட்டம் பற்றி எழுதிய தற்காகப் பத்திரிக்கைகள் மீதும் வழக்குரைஞர்கள் மீதும் 65 நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள்!

நீதிபதிக்கு ஒரு நீதி, மக்களுக்கு ஒரு நீதி என்கிறது இந்த அரசமைப்பு. பணக்காரனுக்கும், பண்ணையார்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் ஒரு நீதி; தொழிலாளிக்கும், விவசாயிக்கும் ஒரு நீதி - என்ற பாரபட்சத்தின் அடிப்படையில்தான் நீதித்துறையே இயங்குகின்றது. அதனால்தான் கீழிருந்து மேல்வரை நீதித்துறை ஊழலில் புழுத்து நெளிகிறது.

கிரிமினல்களும் ரவுடிகளும் ஆதிக்கம் செய்யும் பொறுக்கி அரசியலாக ஓட்டுக் கட்சி அரசியல் சீரழிந்திருப்பதைப் போலவே நீதித்துறையும் சீரழிந்திருக்கிறது. இருப்பினும் ஓட்டுக் கட்சிகளின் சீரழிவு, அதிகார வர்க்கத்தின் லஞ்ச ஊழல்கள் ஆகியவற்றால் இந்த அரசமைப்பின் மீதே நம்பிக்கையிழந்து விட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒளிவிளக்காக நீதித்துறையைச் சித்தரிக்கின்றன ஆளும் வர்க்கங்கள்.

நாடாளுமன்றம் சட்டமன்றம் ஆகிய நிறுவனங்கள் மூலம் தமது நோக்கத்தை வெளிப்படையான முறையில் நிறைவேற்றிக் கொள்ள இயலாத சூழ்நிலைகளிலெல்லாம் நீதிமன்றம் எனும் கொல்லைப்புற வழியை ஆளும் வர்க்கங்கள் தெரிவு செய்கின்றன.

பொதுத்துறை, தனியார்மயம், தொலைபேசித் துறை உள்ளிட்ட பல துறைகளில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், சுயநிதிக் கல்விக் கொள்ளைக்கு அனுமதி, நர்மதை அணையால் பாதிக்கப்பட்ட மக்களை வெளியேற்றுவது, யூனியன் கார்பைடால் கொல்லப்பட்ட மக்களின் நிவாரணம் கோரும் உரிமையைத் தடுப்பது, டில்லி சிறுதொழில்களை சுற்றுச் சூழலின் பெயரால் மூடுவது, குடிசைவாழ் மக்கள் மற்றும் தரைக்கடை வியாபாரிகளை நகரங்களிலிருந்து விரட்டி அவர்களது வாழ்வுரிமையைப் பறிப்பது, அரசு ஊழியர் வேலைநிறுத்த உரிமை பறிப்பு, பொதுக் கூட்டம் ஊர்வலம் ஆகிய ஜனநாயக உரிமைகளுக்குத் தடைவிதிப்பது, ஊழல் அரசியல்வாதிகளை விடுவிப்பது, பாபர் மசூதி வழக்கை இழுத்தடிப்பது... என நீதித்துறையின் மக்கள் விரோதத் தீர்ப்புகள் குறித்து நீண்ட பட்டியலே வெளியிடலாம்.

ஆளும் வர்க்கங்களின் வாயான ஓட்டுக் கட்சிகள் - தேர்தல் அரசியலின் நிர்ப்பந்தம் காரணமாக - வெளிப்படையாகக் கூறத் தயங்கும் மக்கள் விரோதக் கொள்கைகளை இந்த 'ஆசனவாய்' கம்பீரமாக வெளியிடுகிறது. ''நீதிமன்றத் தீர்ப்பு என்பதால் மூக்கைப் பொத்திக் கொண்டு சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று ஒருவிதமான போலிப் பணிவுடன் நாடகமாடுகின்றன ஓட்டுக்கட்சிகள்.

மறுகாலனியாக்கக் கொள்கைகள் தவிர்க்கவியலாமல் கோருகின்ற பாசிச வழிமுறைகளை அரசியல் சட்டத்தின் பெயரால் புனிதப்படுத்தி வழங்கும் பணியை ஏற்றிருக்கின்றன நீதிமன்றங்கள். எனவே இந்த நீதிபதிகளை ஆளும் வர்க்கங்கள் கடவுளாகவே சித்தரிப்பதும், மேற்படி 'லார்டுகள்', தங்களை உண்மையான லார்டாகவே (கடவுளாகவே) கருதிக் கொள்வதும் நடக்கிறது.

எனினும் பிறந்த வீட்டுப் பெருமையை உடன்பிறந்தவனிடம் அளக்க முடியுமா? வழக்குரைஞர்களுக்குத் தெரியாதா நீதிபதிகளின் ஊழல்? ''நீதிதேவதையின் கோயிலில் பூசாரிகள்தான் வழக்குரைஞர்கள் என்கிறது'' ஒரு தீர்ப்பு. ''கடவுள் இல்லை'' என்று முழக்க மிடுகிறார்கள் பூசாரிகள். எனவேதான் சுபாஷன் ரெட்டியின் 25 கட்டளைகள்.

தமிழக வழக்குரைஞர்களின் விடாப்பிடியான போராட்டத்தின் விளைவாக 25 கட்டளைகள் போய் விட்டன. ஆனால் சுபாஷன் ரெட்டி போகவில்லை; நீதித்துறை ஊழல் என்ற பிரச்சினையும், நீதிபதிகளுக்கான நடத்தை விதிகள் குறித்த பிரச்சினையும் தீரவில்லை.

மறுபடியும் வழக்குரைஞர்களின் நடத்தை (வேலை நிறுத்த உரிமை) பற்றிக் கேள்வி எழுப்பியிருக்கிறது உச்ச நீதி மன்றம். இந்தக் கேள்விக்கான பதில் நாடு தழுவிய வழக்குரைஞர் போராட்டம்தான்.

இத்தகையதொரு போராட்டத்தைக் கட்டியமைப்பதற்குத் தேவை வலிமையான ஒருங்கிணைந்த சங்கம். ஆனால் தமிழகம் தவிர அநேகமாக வேறெந்த மாநிலத்திலும் இத்தகைய சங்கம் இல்லை. சிவில் சட்டத்திருத்தத்திற்கு எதிராகவும் மலிமத் குழு அறிக்கைக்கு எதிராகவும் தமிழக வழக்குரைஞர்கள் போராடியதைப் போல வேறெங்கும் போராடவில்லை. எனவேதான் இதை நசுக்குவதற்குப் பெரிதும் முயல்கிறது நீதிதேவதைகளின் 'சங்கம்'.

நீதித்துறை பாசிசம் எனும் இந்தப் பேரபாயத்தை முறியடிப்பதற்கு நாடு தழுவிய இயக்கமொன்றைக் கட்ட தமிழக வழக்குரைஞர்கள் முன்கை எடுக்க வேண்டும். அதன் பின்னர்தான் இது ஒரு மக்கள் இயக்கமாக உருப்பெற முடியும்.

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com

### சுந்தர ராமசாமி புகைப்படக் காட்சி:

# கலைஞன் பரப்பிய வெளி!

● வே. மதிமாறன்

சென்னை தெற்கு போக் சாலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு முன்பு ஹாலிவுட் படத்தின் பிரம்மாண்டமான செட் போல் சிவாஜி கணேசனின் வீடு.

அது தீப்பற்றி எரிந்தது. காரணம், மின்கசிவு. மின் கசிவிற்குக் காரணம் வீட்டில் எல்லா அறைகளும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டவையாம். கழிவறை கூடவா என்பது தெரியவில்லை.

அந்த வீட்டின் சொந்தக்காரர்களில் ஒருவரும், நடிகருமான பிரபு இது பற்றி பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில், "இந்த வீட்டை அப்பா ஆசையோடு வாங்கினார். வீட்டில் இருந்த மரப்படிக்கட்டுகள் அவருக்கு ரொம்ப பிடிக்கும். அவர் ஏறி, இறங்கிய படிக்கட்டுகள் எரிந்து போனது வருத்தமாக இருக்கிறது. (ஏறி இறங்கிய அப்பாவே எரிஞ்சி போயிட்டாரு. படிக்கட்டு போனதுதானா முக்கியம்?) அவருடைய படம் எரியாமல் தப்பியது ஆச்சரியமாக இருக்கிறது" (இதிலென்ன ஆச்சரியம். அதுல தீ பத்தல. அதனால அது எரியலை.)

வீடு தீப்பிடித்து எரிந்தவுடன் கமலா அம்மாள், நடிகர் பிரபு, அவர் மனைவி மற்றும் குழந்தைகள் எல்லாரும் வெளியே ஓடி வந்துவிட்டனர். ஆனால், சிவாஜியின் தம்பி மகன் முரளியின் மனைவி மற்றும் குழந்தைகள் ஓர் அறையில் சிக்கிக் கொண்டனர். அவர்களைக் காப்பாற்றுமாறு குடும்பம் கூக்குரலிட்டிருக்கிறது. சினிமாவில் தீயில் புகுந்து பலபேரைக் காப்பாற்றிய நம் கதாநாயகன் பிரபுவும் "காப்பாற்றுங்கள்" என்று கூக்குரலிட்டிருக்கிறார். சினிமாவில் பிரபுவின் சாகசத்தைப் பார்த்துப் பிரமித்த ஆட்டோக்காரர் ஒருவர், பிரபுவின் கூக்குரலைக் கேட்டு தன் உயிரைப் பணயம் வைத்து கதாநாயகன் குடும்பத்தைக் காப்பாற்றி இருக்கிறார். (இதற்கு முன் மற்ற நாட்களில் அந்த ஆட்டோ ஓட்டுநரை வீட்டுக்குள் சேர்த்திருப்பார்களா?) காப்பாற்றப்பட்ட பின் நம் சாகசக் கதாநாயகன் பிரபு சொல்லியிருக்கிறார்:

"அப்பா கடவுளாக வந்து எங்களைக் காப்பாற்றி இருக்கிறார்!"

இதுதான் அந்த ஆட்டோ ஓட்டுநருக்கு பிரபு காட்டிய நன்றி. (கடவுளாக வந்து காப்பாற்றிய அப்பா எதற்கு தீ வைத்து வீட்டைக் கொளுத்துவானேன்?)

'காப்பாற்றுங்கள்' என்ற பிரபு குடும்பத்தின் கோரஸ் கூக்குரல் கேட்டவுடன் ஆட்டோ ஓட்டுநர் தன் உயிரைப் பணயம் வைத்து சிவாஜியின் குடும்பத்தைக் காப்பாற்றியதற்குப் பதில், சிவாஜியின் உண்மை ரசிகனாக மட்டும் இருந்து, 'சிச்சுவேசனுக்கு'ப் பொருத்தமாக அந்தப் பிரமாண்ட ஹாலிவுட் படத்தின் செட் போன்ற வீட்டின் கேட்டருகில் நின்று, பிரபுவைப் பார்த்து இப்படிப் பாடி இருக்கலாம். "போனால் போகட்டும் போடா! இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா..."

●●●

மேற்சொன்ன இந்த ஆட்டோ ஓட்டுநர் உட்பட ஒட்டு மொத்த ஆட்டோ ஓட்டுநர்களும் வெட்கப்படும்படியான ஒரு செயலைச் செய்திருக்கிறார் இன்னொரு ஆட்டோ ஓட்டுநர். அவர் பெயர் புதுவை இளவேனில்.

வசதியான ஒரு வயதானவரை விதவிதமாகப் புகைப்படம் எடுத்திருக்கிறார். எடுத்ததோடு மட்டுமல்லாமல், அந்தக் கண்றாவிகளை கண்காட்சி வைத்து வேறு காட்டியிருக்கிறார். அவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்தப் பெரியவர் யார்? அவர் வெறும் கதை எழுதுற ஓர் ஆசாமி. அவர் பெயர் சுந்தர ராமசாமி. அவரை எதுக்குப் புகைப்படம் எடுக்கணும்? எடுத்ததை வைச்சு எதுக்கு கண்காட்சி நடத்தணும்?

இதோ புகைப்படம் எடுத்த புதுவை இளவேனில் சொல்கிறார்: "ஓர் எழுத்தாளனின் எழுத்துக்கள் அவனை வாசகனிடம் முழுமையாகக் கொண்டு சேர்ப்பதில்லை. (எழுதுவதைத் தெளிவா எழுதணும்) என்னைக் கவர்ந்த எழுத்தாளரின் இயல்பை, இன்னொரு பக்கத்தை எல்லோருக்கும் கொண்டு சேர்ப்பது ஒரு கலைஞனாகிய எனக்கு (அப்படிப் போடு...!) அவசியமாய்த் தோன்றியது. எனவே, சுந்தர ராமசாமியின் நிஜங்களை நிழற்படங்களாக கண்காட்சி ஆக்கியுள்ளேன்..." இதுதான் ரசிகனின் கலைமனமோ? இல்லை, கலைஞனின் ரசிக மனமோ?

நடிகனை விதவிதமாகப் புகைப்படம் எடுத்து, ரசிக மனோபாவத்திற்குத் தீனியாக 'ப்ளோ-அப்' போட்டு விற்பதை வாங்கிக் குவிக்கும் நடிகனின் ரசிகனுக்கும், சுந்தர ராமசாமியின் ரசிகரான இந்த புதுவை இளவேனிலுக்கும் என்ன வித்தியாசம்?

சரி, புதுவை இளவேனில்தான் "தலைவா, ஒருமுறை உங்க முகத்தை காமிச்சிட்டு போங்க தலைவா!" என்று ரஜினியின் வீட்டு வாசலில் நின்று கூக்குரல் இடுகிற ரசிகனின் மனோநிலையில் இருப்பதால் அவருக்கு எதுவும் புரியவாய்ப்பில்லை. ஆனால், எல்லாம் தெரிந்த ஏகாம்பரம் ஆயிற்றே சுந்தர ராமசாமி! அவருக்குக் கூடவா இது ஆபாசம் என்று தெரியவில்லை. எதைப் பற்றிக் கேட்டாலும் உலக ஞானம் தளும்பத் தளும்ப ஆலோசனை தருகிற, அறிவுரை சொல்லுகிற, எச்சரிக்கிற 'சுரா'வை, 'பு.இ.' உங்களை விதவிதமாக போட்டோ எடுக்கணும்னு கேட்டப்பவே "வேண்டாம் தம்பி,

இது ரஜினி ஸ்டைல்.





படிப்பகம்

www.padippakam.com

இந்த பந்தாவெல்லாம் எனக்குப் பிடிக்காது. தனி மனிதர்களை ரசிக மனோ பாவத்தோட அணுகக் கூடாது'' அப்படீன்னு சொல்லியிருக்கலாம். ஏன்னா, புனைப்பெயரே பந்தாவா இருக்கக்கூடாது என்கிற எண்ணம் உள்ள வர்தான் சுந்தர ராமசாமி.




2003 ஜுன் மாத 'தீரா நதி' இதழில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கிறார் இப்படி... ''கவிதைகளுக்கு பசுவய்யா என்று புனைப்பெயர் சூட்டிக் கொண்டதற்கு விசேஷ காரணம் உண்டா?'' டி.பி. கேசவமணி, திருப்பூர் - 2.

''தமிழ்க் கவிஞர்கள் பொதுவாக ரொமான்டிஸிசத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். நிலப்பிரபுத்துவச் சிந்தனைக்குச் சாதகமான உணர்வுகளும் கற்பனைகளும் உள்ளவர்கள். இவ்வியல்புகளைச் சட்டென நாம் கண்டு கொள்ள முடியாமல் நம்மைத் தடுப்பது அவர்களது வீராவேசமான போலி புரட்சிகரக் கோசங்களே. தமிழ்க் கவிஞர்களின் புனைப் பெயர்களின் பட்டியலை நீங்கள் தயாரித்தால் அவை கற்பனையும் மிகையும் கொண்ட படிமத்தை வற்புறுத்தி வாங்கிக் கொள்ளக் கூடியவையாகவும் இருப்பதைப் பார்க்கலாம். இந்தக் கவிஞர்களின் கலாச்சாரத்தின் மீது மிகக் கடுமையான விமரிசனம் கொண்டவன் நான். ஆகவே, பந்தா இல்லாத, கனவம்சம் இல்லாத ஓர் எளிமையான பெயர்தான் என்னைக் கவரக்கூடியதாக இருந்தது'' என்று பதில் அளிப்பதின் மூலமாக திராவிட இயக்க, இடதுசாரிக் கவிஞர்களை கடுமையாகச் சாடிய இந்தப் பெரியவர், இளையவருக்கு அறிவுரை சொல்லி தவிர்த்திருக்க வேண்டாமா?

ஆனால், இந்த 'எளிமை விரும்பி' என்ன செய்திருக்கிறார் தெரியுமா? இதோ அவரின் ரசிகர் புதுவை இளவேனில் அதை அன்போடு அம்பலப்படுத்துகிறார்:

''காரணம் தெரியாத இந்த ஆர்வத்தை பூர்த்தியாக்கிக் கொடுங்கள் என்று என் புதுச்சேரி நண்பர் ஒருவரிடம் (காலச்சுவடின் பாண்டிச்சேரி 'ஏஜெண்டோ?') முறையிட்டபோது அந்த நபரோ, தொலைபேசியில் சுராவுக்கு உடனடியாகத் தகவலைத் தெரிவித்துப் பேசச்சொல்லி போன் ரிசீவரையும் கொடுத்தார். வாங்கிப் பேசினேன். ''சொல்லுங்க... என்னை படம் எடுக்கணும்னு கேட்டேளாமே? படம் எல்லாம் நல்லா எடுப்பேளா?'' என்று கேட்க, தயங்கித் தயங்கிப் பதில் சொன்னேன். ''சரியா எடுப்பேன் சார்!'' ''சரி, உடனே வாங்கோ'' என்று சம்மதம் சொல்ல, ஊருக்குப் (நாகர்கோயில்) புறப்பட்டுப் போனேன். (குங்குமம், 16.7.2004)

அடுத்தவரைக் கண்டிக்கிற இந்தப் பெரிய மனிதனின் யோக்கியதை எவ்வளவு கேவலமாக இருக்கிறது பார்த்தீர்களா? வாலி, வைரமுத்து போன்ற கவிஞர்கள் கூட இவ்வளவு அருவெறுக்கத்தக்க முறையில் நடந்து கொண்டதில்லை. இது மட்டரகமான நடிகனின் மனோபாவம்தான் என்பதை நிரூபிப்பதுபோல் இந்தக் கன்றாவிகளின் கண்காட்சியின் துவக்க விழாவில், நடிகர் நாசர் இப்படிச் சொல்லியிருக்கிறார்:

''இந்தப் படங்களை எல்லாம் பார்க்கும்போது சுந்தர ராமசாமியை நடிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை வருகிறது.''

நாசர் சொன்னது உண்மைதான். சுந்தர ராமசாமி ஒரு கைதேர்ந்த நடிகர் தான்.

''லைட் எல்லாம் அரேஞ்ஜு பண்ணிட்டேன். சிந்திக்கிற மாதிரி ஒரு போஸ் கொடுங்கள்'' என்று புதுவை இளவேனில் சொல்லியிருப்பார். சுந்தர ராமசாமி சிந்திப்பது மாதிரி தத்ரூபமா போஸ் கொடுத்திருப்பார்.

சிந்திப்பது மாதிரியான இந்த போஸ், புகைப்படத்திற்கு வேண்டுமானால் புதிதாக இருக்கலாம். ஆனால், அவர் எழுத்துக்களில் எப்போதும் தென்படுகிற ஒன்றுதான்.

இந்தப் போசைப் பார்த்துதான் பல அறிஞர்கள் வியந்து போகிறார்கள். சுந்தர ராமசாமியை மையமிட்டு, இந்த அறிவாளிகள் அடிக்கிற அட்டகாசங்களைப் பார்க்கும் போது இந்தப் பழமொழி ஞாபகத்திற்கு வருகிறது: 'கேணப்பய ஊருக்கு கிறுக்குப் பய நாட்டாமை!'

●●●

நின்று போன *'காலச்சுவடு'* நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 1994-இல் மீண்டும் வரப்போவதாகக் கேள்விப்பட்டவுடனே பல அறிஞர்கள் 'சோம்பிக் கிடந்த மனதுக்குப் புத்துணர்ச்சி' என்கிற பாணியில் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அதில் ஒரு கடிதம் இலங்கை பேராதனையிலிருந்து. எழுதியவர் எம்.ஏ. நுஃமான்.

''*காலச்சுவடு* மீண்டும் வருவது பெருமகிழ்ச்சி. எனது *வியூகம்* பேட்டியை அதில் மறு பிரசுரம் செய்ய விரும்புவது நீங்கள் எனக்குத் தரும் கவுரவம். (*'காலச்சுவடு'* மீண்டும் வருவதின் பெருமகிழ்ச்சிக்கான காரணம்) இத்துடன் இரு படங்கள் அனுப்புகிறேன்... 'சுபமங்களா' பேட்டிகளில் வருவது போல நடிகர்கள் மாதிரி செயற்கையான சூழலில் படம் பிடித்துப் போடுவதில் எனக்கு விருப்பம் இல்லை. அது மிகவும் கூச்சமாக உள்ளது'' என்று எழுதியிருக்கிறர். ''காலச்சுவட்டில் எழுதுவது என்னைப் புதிதாகப் பிறப்பிக்கும்'' என்று அந்தக் கடிதத்தின் முடிவில் குறிப்பிட்டிருக்கும் நுஃமான் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் தகுதியை உயர்த்திக் கொண்டு காலச்சுவடுக்கே ஆலோசனை தரும் அளவிற்கு உயர்ந்திருக்கிறார். ஆம், இப்போது அவர் ஆலோசனைக் குழுவில் ஒருவர். இவராவது சுந்தர ராமசாமியிடம் ''எதுக்கு இப்படி சினிமா நடிகன் மாதிரி வெட்கம் கெட்ட வேலை?'' என்று கேட்டிருக்கலாம்? கேட்டாரோ, என்னவோ?

*'காலச்சுவடு'* 2004 ஆகஸ்டு மாத இதழில் இந்தக் கன்றாவிகளின் கண்காட்சியைப் பற்றி செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தியின் பின்னிணைப்பாக தேவிபாரதி என்கிற சுராவின் ரசிகர் - அல்ல பக்தர் - இப்படிச் சிலிர்த்திருக்கிறார்:


படிப்பகம்

www.padippakam.com



சிவலோகப் பதவி சமீபித்து விட்டது!

*"உறங்கும் நதியின் சலனமின்மையும் ஆழியின் தீவிரமும் பின்னிப் படர்ந்த சுராவின் பேருரு ஒரு குழந்தையின் பேதமையோடும், பூரிப்போடும் இளவேனிலின் புகைப்படச் சட்டங்களுக்குள்ளாக நெகிழ்ந்து நிற்கும் தருணங்கள் . வியப்பூட்டக்கூடியவை. இளவேனிலின் இப்புகைப்படங்களை சுராவைப் பற்றிய பல பரிமாணங்களைக் கொண்ட மிக நீண்டதொரு கவிதையை அல்லது குழந்தைகளுக்கான சித்திரக் கதையை, இருளையும், ஒளியையும் கொண்டு எழுத மேற்கொள்ளப்பட்டதொரு முயற்சியாகக் கூடப் பார்க்கலாம். ஒரு குழந்தையைப் போல அவரை இழுத்துக் கொண்டு கடல், காடு, கரை, வனாந்தரமெல்லாம் சுற்றித் திரிய முடிந்திருக்கிறது இளவேனிலுக்கு. கைப்பற்றி நடந்து, நிற்கச் சொன்ன இடத்தில் நின்று, உட்காரச் சொன்ன இடத்தில் உட்கார்ந்து... குழந்தை யார்? இளவேனிலா? சுந்தர ராமசாமியா?*

*சிந்தனையின் ஊற்றுக் கண்களைத் திறக்கும் நீண்ட உரையாடல்களினூடாக வெளிப்படும் அவரது உடல் மொழி, அவரது விழிகளின் அசைவிலும், அசைவின்மையிலும் தென்படும் குறிப்புகள், அவரது புன்னகை, உரத்த சிரிப்பு, கவலை, கோபம், வெறுப்பு.. என அவரது ஆளுமையின் பல பரிமாணங்களைத் தமது நினைவின் பக்கங்களில் தக்க வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இக்கண்காட்சி முற்றிலும் அந்தரங்கமான நெகிழ்வூட்டும் ஓர் அனுபவமாக இருக்கக் கூடும்."*

இப்படிப் புல்லரித்துப் போகும் இந்த பக்தர், கடவுளிடம் (சு.ரா) என்ன வேண்டியிருப்பார்? மேற்கண்ட ஆராதனையின் உள்ளர்த்தம் இதுதான்:

"பகவானே, என் எழுத்துக்கள் தொடர்ந்து *காலச்சுவட்டி*ல் வருவதற்கு நீ அருள் புரிய வேண்டும். அப்படி எழுதியவற்றைத் தொகுத்து *'காலச்சுவடு'* பதிப்பகம் புத்தகமாக வெளியிட நீ துணை புரிய வேண்டும்; இவை இரண்டைத் தவிர ஏழை எழுத்தாளன் எனக்கு வேறு என்ன வேண்டும்?"

இந்த உள்ளுணர்வு தேவி பாரதிக்கு மட்டுமல்ல, சு.ரா.வின் அடியார்கள் (எழுத்தாளர்கள்) அனைவரின் உள்ளுணர்வும் இதுதான். "அப்பனைப் பாடும் வாயால் சுப்பனைப் பாடமாட்டேன்" என்பதுபோல சு.ரா.வைப் புகைப்படம் எடுத்துக் கண்காட்சி வைத்ததுபோல் "இனி யாரையும் எடுக்க மாட்டேன்" என்று அறிவித்து, மற்ற எழுத்தாளர்களை ஏமாற்றி விட்ட 'கேமரா மேதை' இளவேனிலின் உள்ளுணர்வும் இதுதான். இது 'அறிவாளி'களின் திட்டமிட்ட அறியாமை.

ஒருவகையில் புகைப்படம் எடுத்த புதுவை இளவேனிலுக்கு நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த நன்றி அவர் எடுத்த படத்திற்காக அல்ல. எடுக்காமல் விட்ட படத்திற்காக.

ஆம்! சுந்தர ராமசாமி மலம் கழிப்பதுபோலப் படமொன்று எடுத்து கண்காட்சியில் வைத்திருந்தால் அறிவாளிகள் இப்படிக்கூட சிலாகித்து இருப்பார்கள். "என்ன ஒரு மேதமை! உறங்கும் நதியின் சலனமின்மையும், ஆழியின் தீவிரமும் பேளும்போது அந்தக் கலைஞனின் முகத்தில் எப்படி வெளிப்படுகிறது பாருங்கள்!"

ஜெயலலிதா, ரஜினிகாந்த் இவர்கள் தங்களை விதவிதமாகப் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்குக் காரணம் இருக்கிறது. அவர்களின் புகைப்படங்கள் இலட்சக்கணக்கானவர்களால் விரும்பப்படுகிறது. அது அவர்களின் வியாபார, அரசியல் முறைக்கு உகந்தது.

ஆனால், சுந்தர ராமசாமியின் புகைப்பட விருப்பம், சுயபோதையாக இருக்கிறது. தன் உருவத்தை கண்ணாடியில் பார்த்துக் காமுறுகிற மனநோயாளியைப் போல். இது பிழைப்புவாதிகளின் பந்தாவான மனநிலையைவிட ஆபாசமானதாக இருக்கிறது. ஒருவேளை சுயபோதை பிடித்த சுந்தர ராமசாமி, தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆகிவிட்டால் பிறகு ஜெயலலிதா தலைமையில்தான் சு.ரா. அரசை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும்.

*(பின் குறிப்பு: புதுவை இளவேனிலுக்கு வேண்டுகோளோடு: நீங்கள் உங்களை கவிஞன், எழுத்தாளன், மகா கலைஞன் என்று எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். இதெல்லாம் உங்களுக்குப் பெருமையாக இருக்கும். தயவுசெய்து ஆட்டோ ஓட்டுநர் என்று மட்டும் சொல்லாதீர்கள். அது ஆட்டோ ஓட்டுநர்களுக்குப் பெருமையாக இருக்காது.)*

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (செப்டம்பர்'04) முடியும் சந்தா எண்கள்:**
**6, 10, 131, 843, 945**

**அடுத்த இதழுடன் (அக்டோபர்'04) முடியும் சந்தா எண்கள்:**
**3, 84, 130, 174, 176, 178, 186, 248, 261, 355, 361, 362, 376, 435, 442, 462, 469, 473, 479, 571, 829, 830, 845, 846, 847, 912, 916, 941, 955**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.


படிப்பகம்

www.padippakam.com

# இந்திய வரலாற்றில் பகவத் கீதை




"சிறந்த ஞானத்தையும் ஆழமான அறிவாற்றலையும் கொண்டுள்ள செல்வக் களஞ்சியம் என்று போற்றப்படும் கீதை, இயற்றப்பட்ட நாளிலிருந்தே புரட்சிச் சக்திகளுக்கு எதிராகப் போராடுவதற்கான ஆயுதமாகவே பயன்பட்டு வருகிறது" என்பதை அழுத்தமாகத் தனதுமுன்னுரையிலேயே பதிவு செய்கிறார் நூலாசிரியர்.

உலகாயதத் தத்துவங்களுக்கும், பவுத்தத்திற்கும் எதிரான பார்ப்பனியத்தின் ஆயுதமாக பகவத்கீதை உருப்பெற்றதையும், தொடர்ந்தும் நிலை பெற்றிருப்பதையும் ஆதாரங்களுடனும், பல்வேறு ஆய்வாளர்களின் மேற்கோள்களுடனும் விவரிக்கிறார்.

அந்த வகையில், இந்திய வரலாற்றில் பார்ப்பனக் கருத்தியலின் பாத்திரத்தையும், அதன் ஆளும் வர்க்கச் சார்பையும் ஒரு கோட்டுச் சித்திரமாக வழங்குகிறது இந்நூல். பொதுவான வாசகர்கள் அறிந்திருக்க முடியாத, இருட்டடிப்புச் செய்யப்பட்ட இந்தியப் பொருள்முதல் வாதத் தத்துவ மரபுகளை பெருமிதத்துடன் அறிமுகப்படுத்துகிறார் நூலாசிரியர்.

ராகுல்ஜி, தேவி பிரசாத் சட்டோபாத்யாயா, டி.டி. கோசாம்பி, ரோமிலா தபார் போன்ற ஆய்வாளர்கள் இந்தியச் சமூக வரலாற்றிலும் தத்துவஞான மரபிலும் களங்கமாய் நிலைத்திருக்கும் பார்ப்பன மரபை மார்க்சிய நோக்கில் ஆய்வு செய்துள்ளனர். இவையன்றி அம்பேத்கரின் ஆய்வுகள் இத்துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செலுத்தியுள்ளன.

எனினும் வரலாற்றுப் பொருள்முதல்வாதப் பார்வையில் இந்நூல் எழுதப்படாததால், வரலாறென்பது வர்க்கங்களுக்கிடையிலான போராட்டத்தின் வரலாறாக அல்லாமல், கருத்தியல்களுக்கிடையிலான மோதல்களின் வரலாறாகவும், வரலாற்று மாந்தர்களின் வரலாறாகவுமே இந்நூலில் வடிவம் பெறுகிறது.

பவுத்தத்தையோ பிற பொருள்முதல்வாதச் சிந்தனை மரபுகளையோ கருத்தியல் ரீதியில் மோதி வெற்றி கொள்ளும் அருகதையற்ற கீதை இத்தனை நூற்றாண்டுகளாய் ஆதிக்கம் செய்ய முடிவதெப்படி என்ற கேள்விக்குத்தான் நாம் விடை தேட வேண்டும். இனக்குழுச் சமூகத்தின் அழிவிலும், அடிமைச் சமூகத்தின் தோற்றத்திலும் வேர் கொண்டிருந்த 'அர்ச்சுனர்களி'ன் சாம்ராச்சிய ஆசை பவுத்தத்தை நிராகரித்தது. இந்த ஆசையை நியாயப்படுத்துவதற்கான 'அறம்' கண்ணனால் வழங்கப்பட்டது. பின்னர் இந்தியச் சமூகம் எதிர்கொண்ட ஆசியச் சொத்துடைமை உறவுகள் முதல் காலனிய, அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ உறவுகள் வரையிலான அனைத்திலும் வர்க்கச் சுரண்டலை மறைக்கும் கீதையின் 'இலக்கிய ஆற்றலை' காலச் சூழலுக்கு ஏற்ற விதத்தில் சாதுரியமாகப் பயன்படுத்தி வருகிறது பார்ப்பனியம்.

கீதையை உயிரோடு வைத்திருப்பதில் சமூக அடித்தளம் ஆற்றும் பங்கை ஆசிரியரால் காண முடிவதில்லை. எனவே அவர் கட்டோடு வெறுக்கும் பார்ப்பனியம், 'எதிர்ப்போரை வெல்லும் சர்வ வல்லமை பொருந்திய தத்துவஞான சக்தியாக'த் தோற்றம் பெற்று விடுகிறது. 2000 ஆண்டுகளாய் வெல்லப்பட முடியாத அந்தச் சக்தியை வெல்வதற்கு பிரிட்டிஷாரிடம் சரணடைகிறார் ஆசிரியர். முதலாளித்துவக் கருத்தியலை இந்தியாவுக்கு அறிமுகப்படுத்திய ஒரே காரணத்துக்காகக் காலனியாதிக்கத்தையே பொற்காலமென்றும் போற்றுகிறார்.

பிராமண மதத்தை இந்துமதமாக உருவாக்கித் தந்ததற்காக சங்கராச்சாரியின் பாராட்டைப் பெற்ற பிரிட்டிஷ் ஆட்சி இந்நூலாசிரியரின் பாராட்டையும் பெறுகின்ற 'விபரீதம்' இவ்வாறு நடந்தேறுகிறது.

"இந்து மத ஆதிக்கம் சாதியம் குறித்துக் கடுமையான விமரிசனங்களை முன்வைப்பவர்கள் ஏகாதிபத்தியத்தின் ஆளுமைக்கு உட்பட்டே இந்துமதமும் சாதியமும் இயங்குகின்றன என்பதை மறந்து விடுகிறார்கள்" என்று நூலாசிரியரின் இந்தக் குறையை விமரிசிக்கிறது பதிப்புரை.

இது மறதியோ, விவரங்களைப் பரிசீலிக்கத் தெரியாத குறையோ அல்ல; எம்.என். ராய்க்கு ஆசிரியர் செலுத்தும் புகழஞ்சலியிலும், லெனின், ஸ்டாலின் ஆகியோர் மீது அவர் வைக்கும் 'விமரிசனங்களிலும்', விடுதலைப் போராட்ட காலம் முதல் 1970 வரையிலான அரசியல் சூழல் குறித்த பார்வையிலும் ஆசிரியரின் இந்தக் குறை சாதாரண வாசகனைக் கூட அதிர்ச்சிக்குள்ளாக்கும் விதத்தில் பாமரத்தனமாக வெளிப்படுகிறது.

வர்க்கப் போராட்ட அரசியலிலிருந்து பார்ப்பனிய ஒழிப்பைப் பிரித்தொதுக்கும் இந்தக் கண்ணோட்டம், இந்திய வரலாற்றிலிருந்து பகவத் கீதையைப் பிடுங்கியெறிய முடியாத சூழலையே உருவாக்கும்.

நூலாசிரியரின் பார்வை குறித்த இந்த விமரிசனங்களைப் பதிவு செய்வது அவசியமாக இருந்தபோதிலும், பார்ப்பனக் கருத்தியலைத் திரைகிழித்து, இந்திய வரலாற்றிலிருந்து இருட்டடிப்புச் செய்யப்பட்ட பொருள்முதல்வாதத் தத்துவ மரபை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நூல் என்ற வகையில் இதனைப் படிக்க வேண்டிய நூல் என்று தயக்கமின்றிக் கூறலாம்.

மூலநூலை நாம் படிக்கவில்லையென்றாலும், ஆங்கிலச் சொற்களின் நேரடி மொழியாக்கத்தைத் தவிர்த்து நூலாசிரியரின் கூற்று நடையையும், தொனியையும் பற்றிக் கொண்டு கே.சுப்பிரமணியன் அவர்கள் செய்திருக்கும் மொழியாக்கம் வாசகர்களைப் படிக்கத் தூண்டுமென்பது திண்ணம்.

ஒப்பீட்டளவில் மலிவான விலையிலும் தரமான அச்சு மற்றும் கட்டமைப்பிலும் இந்நூலைப் பதிப்பித்துள்ள விடியல் பதிப்பகம் மற்றும் சூலூர் வெளியீட்டகத்தாரின் இம்முயற்சி ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

*நூல்* : இந்திய வரலாற்றில் பகவத்கீதை

*ஆசிரியர்* : பிரேம்நாத் பசாஸ்

*விலை* : ரூ. 350

*வெளியீடு* : விடியல் பதிப்பகம்,
சூலூர் வெளியீட்டகம், 11, பெரியார் நகர்,
மசக்காளிபாளையம் (வடக்கு), கோவை - 15.



படிப்பகம்

www.padippakam.com

# அபு கிரைப்: சித்திரவதையின் நோக்கம்!

அபு கிரைப் சிறைச்சாலையில் இராக் மக்கள் மீது அமெரிக்கத் துருப்புகள் நடத்திய வக்கிரமான சித்திரவதைகள் குறித்த புகைப்படங்களும் ஒளிநாடாக்களும் சென்ற மே மாதம் முதன்முதலாகச் செய்தி ஊடகங்களில் வெளி வந்தன. உலகெங்கும் எழுந்த கண்டனங்களின் விளைவாக இந்த ஒளிநாடாக்களையும் புகைப்படங்களையும் பார்ப்பதற்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் அனுமதித்தது புஷ் அரசு. ஒரு கண்துடைப்பு விசாரணையும் நடக்கிறது.

இன்னும் வெளியிடப்படாத படங்களில் மிகக் கொடூரமான வன்புணர்ச்சிக் காட்சிகளும் இராக்கியச் சிறுவர்களுடனான ஓரினச் சேர்க்கைக் காட்சிகளும் உள்ளதாகக் கூறுகிறது *நியூஸ்வீக்* வார ஏடு.

''துப்பாக்கி முனையில் அம்மணமாக்கப்படும் இராக் பெண்கள், நேரடியான உடலுறவுக் காட்சிகள் ஆகியவற்றைக் கண்டு நான் திகிலில் உறைந்து போனேன்'' என்றார் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டி.மிகான். ''நரகத்தின் படுகுழிக்குள் தள்ளப்படுவது போல இருந்தது. ஆனால் இது நாம் உருவாக்கியிருக்கும் நரகம்'' என்றார் செனட்டர் ரிச்சர்டு ஜே. டர்பின்.

இவ்விதழில் வெளியிடப்பட்டிருப்பவை அமெரிக்க அரசால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட படங்கள். இவற்றை வெளியிட்டிருக்கும் வலைத்தளங்களைத் தேடிப் பிடித்துச் சீர்குலைக்கிறது (hacking) புஷ் அரசின் கூலிப் படை. ''அமெரிக்காவின் மீது வளைகுடா மக்களுக்கு வெறுப்பைத் தோற்றுவிப்பதற்காகவே பரப்பப்படும் போலிப் புகைப்படங்கள் இவை'' என்று கேலிக்குரியதொரு பொய்யையும் பரப்பி வருகிறது புஷ் அரசு.

பொய், புனைசுருட்டுகள் அனைத்துக்குமான அறிவுச் சொத்துடைமையைத் தனது மரபுரிமையாக வரித்துக் கொண்டுள்ள அமெரிக்க அரசிற்கு நாம் விளக்கம் தரத் தேவையில்லை. நம்மிடையே பெருகிவரும் அமெரிக்க மோகிகளுக்கும் அமெரிக்கத் தாசர்களுக்கும்தான் விளக்கம் தேவைப்படுகிறது. அவர்களது தடித்த தோலையும், இலவம் பஞ்சு மூளையையும் ஊடுருவும் வகையிலான விளக்கம் தேவைப்படுகிறது. எனவேதான் இப்படங்களை வெளியிடுகிறோம். சொற்கள் தீண்ட முடியாத சொரணையை இந்த விகாரமான படங்கள் தீண்டக் கூடும் என்பதால் வெளியிடுகிறோம்.

இந்தப் படங்களைக் கண்டு ஒழுக்கவாதக் கண்ணோட்டத்தில் யாரேனும் முகம் சுளிக்கக் கூடுமெனில் அத்தகையோருக்குத் தமது போராட்டத்தின் வாயிலாக மணிப்பூர் பெண்கள் ஏற்கெனவே பதிலளித்து விட்டார்கள். இராணுவத்துக்கு மட்டுமல்ல, பெண்ணை உடலாக மட்டுமே உணர்ந்து கிளர்ச்சி கொள்ளும் ஒவ்வொரு ஆண் மனதிற்கும் வழங்கப்பட்ட செருப்படி அந்தப் போராட்டம், இந்தப் புகைப்படங்களும்தான்.

ஒரு பெண்ணின் மீதும் கைதிகளின் மீதும் ஏவப்படும் பாலியல் வன்முறையை மட்டும் சித்தரிப்பவையல்ல இந்தப் படங்கள். ஒரு தேசம் அதன் சுதந்திரம், இறையாண்மை, கலாச்சாரம் ஆகிய அனைத்தின் மீதும் ஏகாதிபத்தியங்கள் நிகழ்த்தும் கற்பழிப்பின் உருவகம் இது. எண்ணெய்க்கான யுத்தம், டாலருக்கான யுத்தம் என்று மட்டும் இந்த ஆக்கிரமிப்பைப் புரிந்து கொள்ளும் பொருளாதாரச் சவங்களுக்கு, உயிரின் துடிப்பை உணர்த்தும் படங்கள் இவை. ''இந்தப் பாவத்தின் சம்பளம் தான் நீங்கள் அடைய விரும்பும் தங்கம்'' என்ற உண்மையை அமெரிக்காவில் கரைசேரத் துடிக்கும் ஒவ்வொரு மைதாஸுக்கும் உணர்த்தும் படங்கள் இவை.

துப்பாக்கி முனையில் துடிக்கிறது
மனித நாகரிகத்தின் குழந்தை!



தம்மை நாகரிக உலகம் என்று அழைத்துக் கொள்ளும் ஒரு ஓநாய்க் கூட்டம், மனித நாகரிகத்தின் உண்மையான தொட்டிலின் மீதும், அதன் குழந்தைகளின் மீதும்

நாம் பேசும் மொழியை, எழுத்தை, சுதந்திரம் எனும் சொல்லை முதன்முதலில் உச்சரித்த அந்த மழலைகள் மீதும்

நடத்தும் தாக்குதல் - உன் மீதும் என் மீதும் நடத்தப்படும் தாக்குதல்தான் என்பதை உறைக்கச் செய்வதற்கான படங்கள் இவை.

அமெரிக்கா தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் கொடூரத்தை, காலனியாதிக்கத்தின் அநீதியை நிரூபிப்பதற்கு இந்தப் படங்கள் தேவையில்லை. ஆனால் தோற்கடிக்கப்பட்ட மக்களின் கையில் வெற்றியாளர்கள் படும் பாட்டை, உடலால் அடக்கப்பட்டாலும் உள்ளத்தால் பணிய மறுக்கும் ஒரு தேசத்தை, அத்தேசத்தின் ஆன்மாவை, அடக்கியாள முடியாமல் வெறிகொண்டு துடிக்கும் அமெரிக்க வல்லரசின் கையாலாகாத்தனத்தை நிரூபிப்பதற்கு இந்தப் படங்கள் தேவை.

அமெரிக்கக் கொடுங்கோலர்களின் பிடியிலிருந்து விடுபடத் துடிக்கும் இந்தச் சுதந்திரப் பறவைகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தகுதி நமக்கில்லை. நம் கையறு நிலைக்காக அவர்கள் வேண்டுமானால் நம்மீது அனுதாபப் படலாம்.

அமெரிக்க ஓநாய்களின் கோரப் பிடியில் இந்த உலகம் சிக்கி விடாமல் தன்னந்தனியே தடுத்து நின்று கொண்டிருக்கும் இராக் மக்களின் வீரத்தைப் போற்றுவோம்!

●●●


படிப்பகம்

www.padippakam.com

அபு கிரைப் சிறைச்சாலையில் நடைபெறும் கொடுமைகளை முதன்முதலில் உலகிற்குத் தெரிவித்தவை மே மாதம் வெளியான புகைப்படங்கள் அல்ல, டிசம்பர்' 2003-இல் சிறையிலிருந்து கடத்தப்பட்ட நூர் என்ற ஒரு இராக்கியப் பெண்ணின் கடிதம். *(கார்டியன், மே-20, 2004)*

''ஒவ்வொரு நாளும் ஆண் கைதிகள் மற்றும் அமெரிக்க இராணுவத்தினரின் முன் எங்களை அம்மணமாக நடக்க வைக்கிறார்கள். உங்களுடைய தாயோ, சகோதரியோ இந்தச் சிறையில் இருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் அமெரிக்கச் சிப்பாய்களால் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுக் கருத்தரித்திருக்கிறார்கள் என்பது உறுதி. தயவு செய்து எங்கள் மீது குண்டு வீசுங்கள். இந்தச் சிறையின் மீது அணுகுண்டைக் கூட வீசுங்கள். *எங்களைக் கொன்று விடுங்கள்''* - இவ்வாறு அமெரிக்க இராணுவத்தை எதிர்த்துப் போராடும் இராக் போராளிகளிடம் மன்றாடுகிறது அந்தக் கடிதம். *(கிறிஸ்டியன் சைன்ஸ் மானிட்டர்)*

இக்கடிதம் குறித்த செய்தி இராக் மக்களிடையே பரவத் தொடங்கியவுடனே இதனைப் *பொய்* என்று நிராகரித்தது அமெரிக்க அரசு. ஆனால் அமெரிக்க இராணுவம் அமைத்த இரகசிய விசாரணைக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் அந்தோணி தகுபாவின் அறிக்கையோ அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ள வையனைத்தும் *நூற்றுக்கு நூறு உண்மை* என்கிறது.

●●●

ஒபெக் (OPEC) தலைமையகத்தின் எரிபொருள் ஆய்வுத்துறைத் தலைவராக இருந்த *சதல்லா அல் ஃபாத்தி கல்ஃப் நியூஸ் (Gulf News)* எனும் பிரபல பத்திரிக்கையில் எழுதுகிறார்:

''இதுநாள் வரை நான் எண்ணெய் வணிகம் தொடர்பான கட்டுரைகளை மட்டுமே எழுதியிருக்கிறேன். இதோ, இதை எழுதும்போதே நான் அழுகிறேன்... என் தேசத்தில் நடந்ததற்காகவும், நடந்து கொண்டிருப்பதற்காகவும் மட்டுமல்ல, அபு கிரைப் கொடூரங்கள் பற்றிப் பல மாதங்கள் முன்பே கேள்விப் பட்ட போதும், அதை நம்ப மறுத்தேனே, அதற்காக அழுகிறேன்.''

**ஒரு பெண் சிப்பாய் நான்கு ஆண்களுடன் வந்தாள். என்னை அம்மணமாக்கி என்மீது ஒரு ஆணைப் போல அவள் நடந்து கொண்டாள். மற்ற ஆண்கள் கைகொட்டிச் சிரித்தபடியே இதனைப் படமெடுத்தனர். என்னை விடுவித்துக் கொள்ள போராடினேன். அவள் ஆத்திரமடைந்து என்னை நோக்கி நான்கு முறை துப்பாக்கியால் சுட்டாள்.**

''நான் மேல் நாடுகளில் படித்தவன்; வாழ்க்கையின் பெரும்பகுதியை அங்கேயே கழித்தவன்; 'நாகரிகம் பொருந்திய மேலை நாட்டு அரசுகள் இவ்வாறெல்லாம் நடப்பதை அனுமதிக்கவே மாட்டார்கள்' என்று இத்தனைக் காலம் நம்பியிருந்தேனே, அதற்காக அழுகிறேன்.''

*'எங்களைக் கொன்று விடுங்கள்'* என்று அபு கிரைப் சிறைச்சாலையின் பெண் கைதிகள் அனுப்பும் கடிதங்களைப் பற்றி நான் கடந்த மார்ச் மாதமே அறிந்தேன். அப்போதும் அதை நான் நம்ப மறுத்தேன். அது உண்மையல்ல என்பதனால் அல்ல; அந்த உண்மை தோற்றுவிக்கும் மன உளைச்சலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அதை நம்ப மறுத்தேன்.''

''அடுத்த சில நாட்களில் பாக்தாத்திலிருந்து வந்த என் நண்பர் சொன்னார்: 'பக்கத்து வீட்டுப் பெண்கள் இருவர் சில வாரங்கள் சிறையிலிருந்தனர். விடுவிக்கப்பட்டபின் அவர்களைச் சந்தித்து என்ன நடந்ததென்று அறிய முனைந்தேன். கண்ணீர்தான் அவர்கள் தந்த விடை. நீண்ட நேரத்திற்குப் பின் விசும்பியபடியே ஒரு பெண் சொன்னாள், 'என்னைத் தொட்டுவிட்டார்கள்.'''

''இப்போதும் நான் நம்ப மறுக்கிறேன். சில நேரங்களில் உண்மை எனத் தெரிந்தும் அதை நம்புவதற்கு நாம் விரும்புவதில்லை அல்லவா? அப்படித்தான் நானும் இந்த உண்மையை நம்ப மறுக்கிறேன்.''

●●●

நாதியா இப்போது விடுவிக்கப்பட்டு விட்டாள். ஆனால் தனது கன்னிமை சூறையாடப்பட்ட அந்த இருண்ட நாட்களின் கொடிய நினைவுகளிலிருந்து அவள் விடுபடவே முடியாது. லண்டனிலிருந்து வெளிவரும் அல் ஹயாத் நாளேட்டிற்கு அவள் அளித்த பேட்டியிலிருந்து:

''ஆயுதங்களைத் தேடுவதாகக் கூறி அமெரிக்கத் துருப்புக்கள் என் வீட்டில் நுழைந்தார்கள். என்னைத் தூக்கிச் சென்றார்கள். சிறையில் வைத்து என்னைத் துகிலுரித்து நிர்வாணமாக்கி ஆணும் பெண்ணுமாக அமெரிக்கச் சிப்பாய்கள் சுற்றி நின்று கொண்டார்கள். 'பெண் ஆயுத வியாபாரிகளும் இராக்கில் உண்டு என்று இப்போதுதான் கேள்விப்படுகிறேன்' என்று நக்கலடித்தாள் ஒரு பெண் சிப்பாய். நான் மறுத்துப் பேச முற்பட்டவுடன் தாக்கத் தொடங்கினாள். நான் செயலிழந்தேன். ஒரு குவளை தண்ணீர் கொடுத்தாள். ஒரு மிடறு விழுங்கியவுடனேயே சுய நினைவை இழந்தேன். நினைவு திரும்பியபோது நான் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை உணர்ந்தேன்.''

''அடுத்த சில நாட்களில் 5 சிப்பாய்கள் கும்பலாக வந்தார்கள். காமவெறியைத் தூண்டும் இரைச்சலான இசையை அலறவிட்டு அதனை ரசித்தபடியே மாறி மாறி என்னை வேட்டையாடினார்கள்.

''ஒரு மாதத்திற்குப் பின் ஒரு சிப்பாய் வந்தான். என்னைக்

**இன்பமே ஜீவன், டாலரே சத்தியம்! உலகம் தேவனால் உண்டு பண்ணப்பட்டதே அமெரிக்காவின் களியாட்டத்திற்கும் வெறியாட்டத்திற்கும்தான் - ஆமென்!**



www.padippakam.com

குளிக்கச் சொன்னான். குளித்துக் கொண்டிருக்கும்போதே குளியலறைக் கதவை உதைத்துத் திறந்தான். நான் அவனை அறைந்தேன். அவனோ மிருகங்கள் புணர்வதைப் போல என்னைப் புணர்ந்தான். இன்னும் இரண்டு பேரையும் என் மீது ஏவிவிட்டான்.''

''நான்கு மாதங்களுக்குப் பிறகு ஒரு பெண் சிப்பாய் நான்கு ஆண்களுடன் வந்தாள். அவர்கள் கையில் டிஜிடல் காமெரா. என்னை அம்மணமாக்கி என்மீது ஒரு ஆணைப் போல அவள் நடந்து கொண்டாள். மற்ற ஆண்கள் கைகொட்டிச் சிரித்தபடியே இதனைப் படமெடுத்தனர். அவளிடமிருந்து என்னை விடுவித்துக் கொள்ள போராடினேன். அவள் ஆத்திரமடைந்து என்னை நோக்கி நான்கு முறை துப்பாக்கியால் சுட்டாள். தோட்டாக்கள் தலையை உரசிச் சென்றதால் நான் திகிலில் உறைந்தேன். உடனே நான்கு ஆண்களும் என்மீது விழுந்து குதறத் தொடங்கினர். நான் நினைவிழந்தேன்.''

''நினைவு திரும்பிக் கண்விழித்த போது என்னை அவர்கள் குதறிய காட்சி வீடியோத் திரையில் ஓடிக் கொண்டிருந்தது. கண்ணை மூடிக் கொண்டேன். 'எங்களை மகிழ்விக்கத் தான் நீங்கள் பிறந்திருக்கிறீர்கள்! கண்ணைத் திற. பார். பார்' என்று அவள் மிரட்டினாள்.''

''ஆறு மாதங்களுக்குப் பின் விடுவிக்கப்பட்டேன். ஒரு நெடுஞ்சாலையில் பொட்டல் வெளியில் என்னை இறக்கி விட்டு கையில் கொஞ்சம் காசைக் கொடுத்து ''போ, போய் புதிய வாழ்க்கையைத் தொடங்கிக் கொள்'' என்று விரட்டிவிட்டான் ஒரு அமெரிக்கச் சிப்பாய்.''

நாதியா என்ற புனைபெயரில் வாழும் இந்தப் பெண் அவமானத்தால் வீடு திரும்பவில்லை. சொந்த ஊரை விட்டு இராக்கின் வேறொரு மூலையில் வீட்டு வேலை செய்து வயிற்றைக் கழுவுகிறாள்.

●●●

**நா**தியா ஒரு அதிசயம். அபு கிரைப் சிறையிலிருந்து விடுவிக்கப் படும் பெண்களில் பலர் அவமானத்தால் தற்கொலை செய்து கொள்கிறார்கள். கருத்தரித்த பெண்களோ அமெரிக்க நாய்கள் கொடுத்த பிள்ளையைச் சுமக்க மறுத்துத் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத குடும்பத்தினரே பெண்ணைக் கொல்ல முயல்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்திய ஒரு சம்பவத்தை நினைவுகூர்கிறார் பாக்தாத் பல்கலைக் கழகத்தின் பேராசிரியையும், அம்னஸ்டி இண்டர்நேஷனலின் பிரதிநிதியுமான நுவாய்மி.

*''எங்களைக் குண்டு வீசிக் கொன்று விடுங்கள்''* என்று கடிதம் அனுப்பி அபு

# அபு கிரைப்: மிச்சமிருக்கிறது மனச்சாட்சி!

**செ**ன்ற ஜூன் 22-ஆம் தேதி அமெரிக்காவின் மஸாசூசெட்ஸ் நகரில் ஜெஃப்ரி லூசி என்ற 23 வயது இளைஞன் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டான். அவன் இராக்கிலிருந்து திரும்பிய அமெரிக்க இராணுவச் சிப்பாய்.

மார்ச் 2003-இல் இராக்கின் நசிரியா நகரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிராயுதபாணிகளான இராக் மக்களைத் 'தன்னுடைய' இராணுவம் கொலை செய்வதைக் கண்டு தவித்தான் லூசி. ''நான் இங்கே அறநெறியற்ற அநீதிகளைச் செய்து கொண்டிருக்கிறேன்'' என்று தன் காதலிக்குக் கடிதம் எழுதினான்.

அமெரிக்கா திரும்பியவுடன் தன் தந்தையிடம் பேசினான். ''நாங்கள் குழந்தைகளையும் முதியவர்களையும் ஒவ்வொரு நாளும் கொன்றிருக்கிறோம். என் வயதையொத்த இரண்டு இளைஞர்களை நெற்றியில் சுட்டுக் கொல்லுமாறு எனக்கு உத்தரவிட்டார்கள். அவர்கள் கண்களைப் பார்த்தேன். அவர்களுக்கும் ஒரு குடும்பம் இருக்காதா? தடுமாறினேன். சுட்டுவிட்டேன்'' என்று கூறி அழுதான்.

செத்துப்போன லூசியின் கழுத்தில் இரண்டு அடையாள அட்டைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவனால் கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் படங்கள்.

சென்ற ஜூன் மாதம் மட்டும் இராக்கிலேயே 24 அமெரிக்கச் சிப்பாய்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். இராக் சென்று திரும்பிய சிப்பாய்களில் 17 சதவீதம் பேர் தற்கொலைக்குச் செல்லும் அளவிற்கு மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது இங்கிலாந்தின் மருத்துவ ஆய்வுப் பத்திரிக்கை.

இராக்கிலிருந்து திரும்பிய அமெரிக்கச் சிப்பாய்கள் அமைப்பாகத் திரண்டு (IVAW) *இது ஏகாதிபத்திய யுத்தம்* என்று பிரகடனம் செய்கிறார்கள்.

''என் கணவன் போருக்குச் சென்றிருக்கிறான் என்று பெருமை பேசாதே... சாதனையாளர்களை எண்ணித்தான் பெருமைப்பட முடியும்; வேறு வழியில்லாமல் சிக்கிக் கொண்டவர்களைப் பார்த்து யாராவது பெருமை கொள்ள முடியுமா? எங்களுக்காக அனுதாபப் படுங்கள்; கண்ணீர் விடுங்கள்'' என்று இராக்கிலிருந்து கடிதம் எழுதுகிறார் ஒரு சிப்பாய். 2000 அமெரிக்கச் சிப்பாய்களின் குடும்பத்தினர் ''இராணுவத்தைத் திரும்பப் பெறு'' என புஷ்ஷை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

இராக்கிலிருந்து திரும்பிய சார்ஜெண்ட் காமிலோ மெஜியா மீண்டும் இராக் சென்று போரிட மறுத்துச் சிறை சென்றிருக்கிறார். கடும் தண்டனை விதித்தால் சிப்பாய்களிடையே கலகம் தோன்றுமோ என்று அஞ்சி ஓராண்டு மட்டுமே தண்டனை விதித்துள்ளது அமெரிக்க நீதிமன்றம்.

''இராணுவத்தில் சேர்ந்து இராக் செல்லும் மாணவர்களுக்கு உயர் கல்வி இலவசம்'' என்று ஏழை இளைஞர்களுக்குத் தூண்டில் வீசுகிறது புஷ் அரசு. ''எங்களுடைய போர், களத்தில் துவங்கவில்லை; கல்விக் கூடத்தில் தொடங்குகிறது'' என்று கண்டிக்கிறார் இராணுவ ஆளெடுப்பு மையத்தின் அதிகாரி.

ராபின் பான்டன் என்ற 13 வயதுச் சிறுமி - இராக் சென்றிருக்கும் சிப்பாயின் மகள் - அமெரிக்க நாடாளுமன்றத்தின் முன் தன்னந்தனியே மறியல் செய்கிறாள். ''என் தந்தையை எனக்குத் திருப்பிக் கொடு. ஒரு பொய்க்காக அவர் உயிரை விடுவதை நான் அனுமதிக்க மாட்டேன்'' என்கிறது அவள் கையில் ஏந்தியிருக்கும் முழக்க அட்டை.

●


படிப்பகம்

www.padippakam.com

கிரைப் சிறையின் கொடுமைகளை உலகிற்கு அறிவித்த பெண் யார் என்பதைக் கண்டுபிடித்து, பாக்தாத் நகரில் அந்தப் பெண்ணின் வீட்டைத் தேடிச் சென்றார் பேராசிரியை நுவாய்மி. நூர் என்ற அந்தப் பெண்ணின் குடும்பமே ஊரை விட்டுப் போய்விட்டது. "அவள் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை" என்கிறார் நுவாய்மி.

●●●

ஆஸ்வாய் - இருபது வயதுப் பெண். திடீரென்று ஒருநாள் அவளுடைய தாய் காணாமல் போய்விட்டாள். ஒருவேளை கைது செய்யப்பட்டிருப்பாளோ என்று அஞ்சி அபு கிரைப் சிறைக்கு நடையாய் நடக்கிறாள் ஆஸ்வாய். "அப்படி யாரும் இங்கே இல்லை" என்று கூறி விரட்டுகிறார்கள் அமெரிக்கச் சிறை அதிகாரிகள்.

அபு கிரைப் சிறையின் வீடியோ காட்சிகள் என்ற குறுந்தகடு மர்மமான முறையில் பாக்தாதில் புழங்கத் தொடங்குகிறது. அதில் தன்னுடைய தாயின் படத்தையும் பார்த்த ஆஸ்வாய் "இது உண்மையாய் இருக்க முடியாது" என்று கதறுகிறாள்.

அடுத்த சில நாட்களில் செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து வந்த கடிதம் "உங்கள் தாய் அபு கிரைப் சிறையில் இருக்கிறார்" என்று தெரிவிக்கிறது. "என் அம்மாவுக்கு *எதுவும்* நேராமல் கூட இருக்கலாம். ஆனால் யார் நம்புவார்கள்?" என்று கூறி விசும்புகிறாள் ஆஸ்வாய்.

●●●

அபு கிரைப் படங்கள் வெளிவந்ததையொட்டி அமெரிக்கக் கட்சிகளும் ஊடகங்களும் வெளியிட்டு வரும் அதிர்ச்சியும் கண்டனங்களும் அயோக்கியத்தனமான மோசடிகள் என்கிறார் ஃபிரண்ட் லைன் இதழின் அமெரிக்கச் செய்தியாளர் விஜய் பிரசாத்.



உரியப்படும் ஆடை ஒவ்வொன்றுக்கும் ஒரு அமெரிக்க சிப்பாயியின் உடலைப் பரிசளிப்பார்கள் இராக் மக்கள் - மகனைப் போருக்கு அனுப்பும் மூதாட்டி!

"கலிஃபோர்னியா சிறையில் கைதிகளை கிளாடியேட்டர் பாணியில் ரத்தம் சொட்டச் சொட்ட மோதவிட்டு இந்த விளையாட்டைக் கண்டு களித்தனர் சிறை அதிகாரிகள். விசாரணைக்குப் பின் ஜூன் 2001-இல் இந்த அதிகாரிகளைக் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்தது அரசு."

"பெண்கள் சிறையில் 16 பெண் கைதிகளை வன்புணர்ச்சிக்கு உட்படுத்திய குற்றத்துக்காக 11 அதிகாரிகள் 1999-இல் தண்டிக்கப்பட்டனர்."

"இளம் பெண்களுக்கான சீர்திருத்தப் பள்ளியொன்றில், அப்பெண்களை நிர்வாணமாக்கி, கைகளை அகல விரித்து விலங்கிட்டு, உடலெங்கும் மிளகாய் பொடியைத் தடவி ஒவ்வொரு நாளும் 23 மணிநேரம் தனிமைச் சிறையில் வைத்தனர் சிறை அதிகாரிகள்" என்று அமெரிக்கச் சிறைகளின் யோக்கியதையைப் பட்டியலிடும் பிரசாத், "அமெரிக்கச் சிறைகளின் நீட்சி தான் அபு கிரைப். இது விதிவிலக்கல்ல" என்று நிறுவுகிறார்.

தன் சொந்த மக்களையே விலங்குகள் போல நடத்தும் அரசு, ஆக்கிரமிக்கப்பட்ட தேசத்தை எப்படி நடத்தும் என்பதைப் புரிந்து கொள்ள ஆதாரம் எதுவும் தேவையில்லை.

"எங்களை மகிழ்விப்பதற்காகத்தான் நீங்கள் பிறந்திருக்கிறீர்கள்" என்று நாதியாவிடம் சொன்னாளே அந்தப் பெண் சிப்பாய், அது அவளுடைய தனிப்பட்ட கருத்தல்ல; அமெரிக்க அரசின் கொள்கை. தாங்கள் சுகிக்கவும், சூறையாடவும், கசக்கிப் பிழியவும், பருகவும்தான் இந்த உலகம் தேவனால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது என்பதே அமெரிக்க ஏகாதிபத்திய முதலாளிகளின் கருத்து.

சமூக உணர்வற்ற தனிநபர்களாய் நொறுக்கிச் சிதறடிக்கப்பட்ட அந்தச் சமூகமோ "தானும் தன் இன்பமுமே ஜீவன், அதை வழங்கவல்லடாலரே சத்தியம்" என்று நம்புகிறது. காதல், அன்பு, பாசம், நட்பு, இரக்கம் போன்ற மனிதனுக்குரியவை அனைத்தையும் துறந்து, நாக்கும் வயிறும் குறியுமே இன்பத்தின் திறவுகோல்கள் என்று கொண்டாடுகிறது. எனவே, துடிக்கும் புழுவைப் புணரவும், விம்மி

**மானத்தைத் துணியில் தேடும் தேசமா ஆயிரம் சவப்பெட்டிகளை அமெரிக்காவிற்கு அனுப்பி இருக்கும்? தமது வீரத்தைக் கவச வண்டிக்குள் ஒளித்துக் கொண்ட அமெரிக்கச் சிப்பாய்களிடம் "கால் செருப்பில் இருக்குதடா வீரம்" என்று கற்பித்தவர்கள் இராக்கின் சிறுவர்கள்.**


படிப்பகம்

www.padippakam.com

வெடிக்கும் கண்ணீரைச் சுவைக்கவும் அமெரிக்கப் படையினரால் இயலும். நிறவெறி மட்டும்தான் அவர்களிடம் எஞ்சியிருக்கும் 'பண்பாட்டு விழுமியம்.'

அரசுப் படையைக் காட்டிலும் கூலிப்படைச் சிப்பாய்களுக்குச் சம்பளம் அதிகமென்பதால், இராணுவத்திலிருந்து ராஜினாமா செய்து கூலிப்படையில் சேருகிறார்களாம் அமெரிக்க 'வீரர்'கள். அமெரிக்காவால் புதிதாகப் பயிற்றுவிக்கப்பட்ட இராக்கிய வீரர்களோ, சொந்த மக்களைச் சுட மறுத்து போராளிகளின் அணியில் போய்ச் சேருகிறார்கள்.

கூலிக்குத் தம் உயிரை விலை பேசியிருக்கும் அமெரிக்கக் கூலிப்படைதான் இராக்கில் ஜனநாயகத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்படும் உற்பத்தி இலக்கைப் போலவே, கூலிப்படையினர்க்கும் 'இலக்குகளை' நிர்ணயிக்கிறது புஷ் அரசு.

கொல்லப்பட வேண்டிய போராளிகள், கைப்பற்றப்பட வேண்டிய ஆயுதங்கள், கைது செய்யப்பட வேண்டிய சதாம் அரசின் அதிகாரிகள், உருவாக்கப்பட வேண்டிய உளவாளிகள் - அனைத்திற்கும் இலக்கு தீர்மானிக்கப்படுகிறது. இலக்கை எட்டுவதற்கான வழிமுறைகளுக்கு வரம்பு இல்லை; முழுச் சுதந்திரம்! அந்தச் சுதந்திரத்தின் விளைவை அனுபவிக்கிறாள் இந்த இராக்கிப் பெண். (பின் அட்டை).

அவள் ஒரு போராளியின் மனைவியாக இருக்கக் கூடும்; பிணைக் கைதியாகப் பிடித்து வரப்பட்ட சகோதரியாக இருக்கக் கூடும்; சும்மா முகர்ந்துவிட்டு எறிவதற்காகக் கடைவீதியிலிருந்து ராணுவ வண்டியில் தூக்கிப் போடப்பட்ட யாரோ ஒரு பெண்ணாக இருக்கக் கூடும்; அல்லது உளவாளியாக மாற மறுக்கும் போராளியாகவும் இருக்கக் கூடும்.

உளவாளிகளை உருவாக்கும் 'கலை'யில் அமெரிக்க இராணுவத்தைப் பயிற்றுவித்து வருகிறார்கள் இஸ்ரேல் உளவுத் துறை அதிகாரிகள். கைது செய்யப்படும் பாலஸ்தீனப் பெண்களை வன்புணர்ச்சிக்கு ஆளாக்கியும், நிர்வாணப் படமெடுத்தும் வைத்துக் கொண்டு அவர்களை விடுவிப்பது; சில ஆண்டுகளுக்குப் பின் இந்தப் படங்களைக் காட்டி ஐந்தாம் படை வேலை செய்யச் சொல்லி நிர்ப்பந்திப்பது, இல்லையேல் உன் குடும்ப வாழ்க்கையைச் சீர்குலைப்போம் என மிரட்டுவது — இது இஸ்ரேலின் மொசாத் உளவுப்படை கையாண்டு வரும் வழிமுறை. இந்த வழிமுறைதான் இராக்கிலும் இன்று பின்பற்றப்படுகிறது.

எனவே கற்பழிப்பைப் படம்பிடித்ததென்பது சிப்பாய்களின் வக்கிரம் மட்டுமல்ல; இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அமெரிக்க இராணுவம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் அதிகாரபூர்வமான போர்த்தந்திரம்.

''ஒன்று: அராபியர்களுக்குப் புரியக் கூடிய ஒரே மொழி வன்முறை; இரண்டு: அவர்களுடைய மிகப்பெரிய பலவீனம் அவர்களது மானஉணர்ச்சி'' என்று 'அராபிய மனம்' (The Arab Mind, 1973) எனும் நூலில் குறிப்பிடுகிறான் ரபேல் பதாய் என்ற அமெரிக்க ஆய்வாளன்.

''இந்த நூல்தான் இன்றைய புஷ் அரசின் வேதப் புத்தகமாகப் பயன்படுகிறது'' என்று அபு கிரைப் கொடுமைகளை விளக்குகிறார் *'நியூயார்க்கர்'* நாளேட்டின் செய்தியாளர் செய்மர் ஹெர்ஷ்.

மானத்தைத் துணியில் தேடும் தேசமா ஆயிரம் சவப்பெட்டிகளை அமெரிக்காவிற்கு அனுப்பியிருக்கும்? தமது வீரத்தைக் கவச வண்டிக்குள் ஒளித்துக் கொண்ட அமெரிக்கச் சிப்பாய்களிடம் ''கால் செருப்பில் இருக்குதடா வீரம்'' என்று கற்பித்தவர்கள் இராக்கின் சிறுவர்கள். தெருவோரக் கல்லும் தீக்குண்டாகும் என்று இஸ்ரேலுக்கு நிரூபித்து வருபவர்கள் பாலஸ்தீன இளைஞர்கள்.

உரியப்படும் ஆடை ஒவ்வொன்றுக்கும் ஓர் உடலைப் பரிசளிப்பார்கள் இராக் மக்கள். சவப்பெட்டிகளுக்கான ஏற்றுமதி வாய்ப்பை டில்லியை ஆளும் சவங்கள் கணக்கிடட்டும். அமெரிக்கச் சொர்க்கத்தை அடைவதற்காக விரதமிருக்கும் சவங்கள் இந்தப் படங்களைப் பார்த்த பின்னராவது உயிர்த்தெழட்டும்!

● சூரியன்

# அபு கிரைப்: நாடகம் கூறும் உண்மை

'அபு கிரைப்' கொல்கத்தாவில் நாடகமாக்கப்பட்டுள்ளது. ''இது கற்பனைக் கதையல்ல; அபு கிரைப் குறித்த மனித உரிமைக் குழுவின் ஆய்வறிக்கை, இராணுவ அதிகாரி அந்தோனியோ தகுபாவின் விசாரணை அறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது. கதைமாந்தர்களும் உண்மையானவர்களே'' என்கிறார் நாடகாசிரியர் சங்க்ராம் குஹா.

ஒரு நீதிமன்ற விசாரணையைப் போல வடிவமைக்கப்பட்டுள்ள இந்நாடகம், வெறுமனே சித்திரவதையை மட்டும் சித்தரிக்கவில்லை; ''சித்திரவதையின் நோக்கமென்ன?'' என்ற கேள்வியை எழுப்பிக் கீழ்க்கண்டவாறு விடை சொல்கிறது.

''அபு கிரைப் சிறையில் கைதிகள் அனைவரும் சோதனைச் சாலை எலிகள். சித்திரவதையின் எந்தக் கட்டத்தில் ஒரு கைதி நொறுங்கிப் போய்ச் சரணடைகிறான் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டு, அந்தத் தருணத்தில் அவனுடைய இரத்தத் துளிகள் சோதனைக்கு எடுக்கப்படுகின்றன. இரத்தத்தின் மரபணுக் கட்டுமானத்தில் (Genetic structure) சித்திரவதை செய்யப்பட்ட மனிதனின் மனதில் உருவான பீதி என்னவிதமான மாற்றங்களை உருவாக்கியிருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்படுகிறது. சித்திரவதை தோற்றுவிக்கும் இந்தப் பீதியை, மரபணுக் கட்டுமானத்தில் மாற்றம் ஏற்படுத்துவதன் வாயிலாகவே ஒரு கைதியின் மனதில் தோற்றுவித்துவிட முடியுமா என்பது அமெரிக்காவில் ஆராயப்படுகிறது.'' - இதுதான் நாடகம் சுமத்தும் குற்றச்சாட்டு. ''புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம்'' என்று அழைக்கப்படும் உலக மேலாதிக்கத் திட்டத்தின் ஒரு அங்கம்தான் அபு கிரைப் சித்திரவதைகள் என்று நிறுவுகிறது நாடகம்.


இந்நாடகம் எழுப்பும் கேள்வி அதீதமானதோ, கற்பனையானதோ அல்ல; கைது செய்யப்பட்ட சீன மக்களைக் குறுக்கு நெடுக்காகப் பிளந்து பார்த்து 'அறிவியல் ஆய்வு' நடத்தியது ஜப்பான் இராணுவம். மருத்துவ விஞ்ஞானிகளைப் பயன்படுத்தி இட்லர் நடத்திய ஆய்வுகளை அம்பலப்படுத்தியது 'மருத்துவர்கள்' என்ற ஜெர்மன் நாடகம்.

அமெரிக்கா நடத்தும் உயிரியல் யுத்தம் என்பது விஞ்ஞானக் கதையல்ல; எதார்த்தம். நேற்று வியத்நாம் — இன்று இராக்.

●

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com



"நாம் சுதந்திரத்தை
நேசிக்கிறோம் அவர்கள்
இதை புரிந்து கொள்ள
மறுக்கிறார்கள்.... நாம்
பழிவாங்க விரும்பவில்லை.
நீதியைத் தேடுகிறோம்-
அன்பின் வழியில் !"



**அபு கிரைப் :
அம்மணமாகிறது
அமெரிக்கா !**



NIKE
JUST DO IT




**செய்...
செய்து முடி!**

படிப்பகம்

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/PMG (CCR)/239/03-05
www.padippakam.com

"அபு கிரைபில் நடந்துள்ளவை நானறிந்த அமெரிக்காவை பிரதிபலிக்கவில்லை. நானறிந்த அமெரிக்கா அன்புமயமானது. சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டது. நானறிந்த அமெரிக்கா, இராக்கில் சுதந்திரத்தை தோற்றுவிக்கத்தான் ராணுவத்தை அனுப்பியுள்ளது."



## அபு கிரைப் : அம்மணமாகிறது அமெரிக்கா !






படிப்பகம்